
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

29-2-1976

60 காசு



கோகுலம்

மலர் 4 ❊ இதழ் 24

பிப்ரவரி 29, 1976

ராட்சஸ, மாசி, 17



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விகிதம்

இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 40.00
ஆறு மாதம்	ரூ. 20.00

அன்புமிக்க குழந்தைகளே !

கடந்த சில இதழ்களில் கேள்விக் குறி எதற்கு என்று ஊகம் செய்து எழுதும்படி கோகுலம் வாசகர்களான உங்களைக் கேட்டிருந்தோம். பலரும் பல விதமாக ஊகம் செய்து எழுதியிருக்கிறீர்கள்.

கோகுலம் வார இதழாக வெளிவரப் போகிறது என்று பலரும்,

வாசகர்கள் கேள்வி - பதில் பகுதி வெளி வரப் போகிறது என்று சிலரும்,

வாண்டு மாமாவின் புதிய சித்திரக் கதை ஆரம்பமாகப் போகிறது என்று சிலரும்,

விலையை உயர்த்தி விடப் போகிறோமோ எனப் பயந்து சிலரும் பலவிதமாக ஊகம் செய்து எழுதியுள்ளீர்கள்.

கோகுலம் பத்திரிகை பிறந்து நான்கு ஆண்டுகள் இந்த மார்ச் மாதத்துடன் நிறைகின்றன. வருகிற தமிழ்ப் புத்தாண்டில் உங்கள் கோகுலம், தனது ஐந்தாவது வயதில் அடியெடுத்து வைக்கிறது. இச் சந்தர்ப்பத்தில் ஒரு கேள்விக்குறியைப் போட்டுக் கோகுலத்தில் என்னென்ன புதிய பகுதியையெல்லாம் தொடங்கலாம் என்பதை முடிவு செய்யுமுன் உங்கள் கற்பனைக் குதிரைகளைத் தட்டிவிட்டு உங்களுடைய 'ஐடியா'க்களை ஓசியில் பெறலாமே என்றுதான் எண்ணினோம்.

கோகுலத்தை வாரப் பத்திரிகையாகச் செய்துவிட வேண்டும் என்ற ஆசை எங்களுக்கு இருந்த போதிலும் அதில் 'அவசரம் வேண்டாம்' என்று இப்போதைக்கு அந்த எண்ணத்தைத் தள்ளிப் போட்டிருக்கிறோம்.

புதிய பகுதிகள் என்னென்ன கோகுலத்தில் தொடங்க இருக்கின்றன என்பதை அடுத்த இதழை வாங்கிப் பார்த்தால் தெரியும்.

புதிய பகுதிகள் தொடங்கப் போகும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் ஆதரவைத் தொடர்ந்து அளிப்பதுடன் உங்கள் நண்பர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர்களையும் கோகுலம் வாங்கிப் படிக்கச் செய்து கோகுலத்தின் விற்பனை பல்கிப் பெருகவும் உதவ வேண்டுகிறோம்.

தமிழ்ப் புத்தாண்டில் உங்கள் நண்பர்களுக்கு நீங்கள் ஏதும் பரிசளிக்க விரும்பினால் உங்கள் நண்பர் பெயரில் கோகுலத்துக்குச் சந்தா அனுப்பி நீங்களும் மகிழ்ந்து அவரையும் மகிழச் செய்யலாம் அல்லவா?

உங்கள் அன்புள்ள

ஆசிரியர்



அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

நாயின் நன்றி

சிவராம் சேட் வட்டிக் கடை வைத்து நகை மீதும், நம்பிக்கையானவர்களிடம் 'பாண்டு' மீதும் பணம் கொடுத்து வாங்கிப் பெருமிதமாக வாழ்ந்தார்.

தன்பால் வந்து யாசிப்பவர்களுக்கு முடிந்தவரை தான தருமம் செய்து வந்தார். அவரிடம் அறிவுள்ள நாய் ஒன்று இருந்தது.

நாய்க்கு நன்றி அதிகம் உண்டு. சேட் குதிரை மீது அயலூர்களுக்குப் போய் வருவார். அப்போதும் நாய் உடன் சென்று வரும். நாய்க்கு நல்லுணவு தந்து குழந்தை போல் அதனிடம் சேட்டு அன்பு காட்டி வந்தார்.

ஒருநாள் சேட்டு குதிரை மீது வெளியூர் சென்றார். வழக்கம்போல் நாய் உடன் சென்றது. வெளியூரில் வசூலான பணத்தை ஒரு பையில் இட்டுக் கட்டிக் குதிரை மீது வைத்துத் தம் ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

வழியில் சோலை சூழ்ந்த ஒரு தாமரைக் குளம். அங்கு இறங்கிக் குளத்தில் கைகால் முகங் கழுவி நீர் பருகினார். சற்று இளைப்பாற வேண்டிக் குளக்கரையில் ஆலமரத்தடியில் பணப் பையைத் தலையணையாக வைத்து உறங்கினார். உடம்பில் உள்ள அசதியாலும் புல்தரையின் வசதியாலும் அயர்ந்து நன்கு தூங்கி விட்டார் சேட். சூரியன் அஸ்தமனம் ஆனான்.

சேட்டு திடுக்கிட்டுக் கண் விழித்து எழுந்தார். சற்று இருட்டத் தொடங்கியது. ''ஐயோ! நாம் பணத்துடன் இருக்கிறோமே! கள்ளர் பயம் உள்ள இடம் ஆயிற்றே! அயர்ந்து தூங்கி விட்டோமே'' என்று மனத்துக்குள் நினைத்துத் தம்முடைய அறியாமையை நொந்து கொண்டார்.

அந்த அதிர்ச்சியினால் பணப் பையை மறந்து குதிரை மீது ஏறிக் கடும் வேகமாகப் புறப் பட்டார்.



நாய் இதனைக் கவனித்தது. ''எஜமானர் பணப் பையை மறந்துவிட்டுப் போகின்றாரே, உணவு கொடுத்து நம்மைக் காக்கும் தலைவனுடைய பணத்தை யாரும் அபகரித்துப் போகக் கூடாதே'' என்று எண்ணி உள்ளம் நொந்தது. இந்த விஷயத்தை சேட்டுக்கு எடுத்துச் சொல்ல அதற்கு வாய் இல்லை. குதிரையைப் போக விடாமல் குறுக்கே வந்து குரைத்து மறித்தது.

சேட்டு, 'நாம் அவசரமாகப் போகிறோம். இந்த நாய் இப்போது நேரம் காலம் தெரியாமல் நம்மோடு விளையாடுகிறதே' என்று எண்ணினார். சாட்டையால் அதை அடித்தார்.

பணத்தை யாரும் அபகரிக்கக் கூடாதே என்று எண்ணிய நாய் பணம் இருக்கின்ற இடத்துக்கு ஓடிப்போய்ப் பார்த்தது. பணப் பையைக் கண்டு களித்தது. மறுபடியும் ஓடி வந்து எஜமானனை மறித்தது.

சேட்டு சீற்றமடைந்து சாட்டையால் பலமுறை நாயை அடித்தார். அடி



யைத் தாங்கிக் கொண்டு நாய் வாலை அசைத்தது. குதிரையைத் தடுத்தது. மறுபடியும் பணப்பை உள்ள இடத்துக்கு ஓடிப் போய்ப் பார்த்தது. மறுபடியும் குடல் தெறிக்க ஓடி வந்து குதிரையைத் தடுத்தது.

அப்போது இரவு மணி எட்டு ஆயிற்று. சேட்டு பெருங் கோபம் அடைந்தார். இந்த நாய்க்குப் பைத்தியம் பிடித்து விட்டது போலும் என்று எண்ணி ரிவால்வரை எடுத்து நாயைச் சுட்டு விட்டார்.

குண்டு பாய்ந்து உதிரம் ஒழுக ஓடிப் பணப் பையின் மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டது நாய். அதன் உயிர் உள்ளும் புறமும் ஊசலாடிக் கொண்டிருந்தது. எஜமான் வரவில்லையே என்று அவர் வரும் வழிமேல் விழி வைத்துக் கொண்டு குண்டு அடிபட்ட வேதனையுடன் இருந்தது.

சேட்டு வீட்டுக்குப் போய்க் குதிரையை விட்டு இறங்கினார். பணப் பையைப் பார்த்தார். இல்லை. மனம் பதறினார். 'ஆ! அவசரத்தில் பணப் பையை எடுக்கவில்லை. அதனால்தான் நம் அறிவுள்ள நாய் நம்மைப் பல முறை தடுத்தது. நாம் புத்தியில்லாமல் புத்தியுள்ள நாயைச் சுட்டுவிட்டோமே!'' என்று எண்ணி அழுதார்.

மறுபடியும் குதிரை மீது ஏறி வாயு வேகமாகப் பறந்து சென்றார். தாம் தங்கிய குளத்தருகில் சென்றார். பணப் பையைக் கண்டார். அதன் மீது தலையை வைத்துக் குடல் சரியப் படுத்திருந்த நாயையும் பார்த்தார்.

உடையவரிடம் உடைமை சேர்ந்து விட்டது. நாய் ஆறுதல் அடைந்து தன் வாலைச் சிறிது அசைத்துக் கண்ணை மூடிவிட்டது. அதன் ஆருயிர் பிரிந்தது.

நாயின் நன்றி நிறைந்த நல்லறிவை எண்ணிச் சேட்டு கதறிக் கதறி அழுதார். பணப் பையையும் இறந்த நாயையும் தம் குதிரை மீது வைத்து வீட்டுக்கு வந்தார். அவருக்குத் தாங்க முடியாத துயரம்.

மறுநாள் நாயைப் புதைத்து அதன் மீது வைரவருடைய சூலத்தை வைத்து அபிஷேகம் செய்தார். அவர் ஆயுள் உள்ளவரை மறவாது நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தார்.



அம்மா பேச்சைக் கேட்காமல்

ஏதோ பசிக்குமே என்பதால் சாப்பிட உட்கார்ந்தானே ஒழிய, மதியம் நடந்த சம்பவங்களையே நினைத்து 'இந்த அம்மாவால்தான் எல்லாம் கெட்டது' என்று ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தான் சுரேஷ்.

அம்மா சாயந்திரம் ஊருக்குப் புறப்பட இருந்ததால் காலையில் பஸ் நேரம் தெரிந்து வருவதற்காக பஸ் நிலையம் போயிருந்தான். அங்கே டாய்லெட் ரூமுக்குள் நுழைந்தபோது பெரிய தோல் பை ஒன்று கேட்பாரற்றுக் கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தவன் 'யாரேனும் மறதியாக விட்டுப் போயிருப்பார்கள், பார்ப்போம் என்று காத்திருந்தான். பையை லேசாகத் திறந்து பார்த்தபோது ரூபாய் நோட்டுக்கள் கத்தை கத்தையாக இருப்பது தெரிந்தது. அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. கால் மணி நேரமாகக் காத்திருந்தும் யாரும் தேடி வரவில்லை. விறுவிறுவென்று வீட்டுக்கு வந்து விட்டான்.

''அம்மா... அம்மா...! நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்து விட்டது. கடவுள் நமக்குக் கருணை காட்டி விட்டார்''

''என்னம்மா நீ.... கடவுளே நம்ம கஷ்டத்தைப் பார்த்துக் கொடுத்ததைப் போய்...'' என்று சுணங்கினான்.

அம்மா விடவில்லை. தான் ஒருமுறை ஐந்து ரூபாயைத் தவற விட்டபோது எத்தனை கஷ்டப்பட நேர்ந்தது என்பதை நினைவூட்டினாள்.

''போம்மா...! கந்தல் துணியைக் கட்டிக்கிட்டு சாப்பாட்டுக்கு லாட்டரி அடிச்சுக்கிட்டுக் காலமெல்லாம் கஷ்டப்படச் சொல்றியா? 'கடவுள் கருணை காட்டுவார், கருணை காட்டுவார்' என்று சொல்லுவியே, இது அவருடைய கருணை இல்லாமல், பின்னே என்ன?'' என்று கேட்டான் ஆத்திரத்துடன்.

''எல்லாருமே உழைக்கணும்; பலனை அனுபவிக்கணும்கிறதுதான் கடவுளுடைய நியதி. எல்லோருமே கடவுள் கருணை காட்டுவார் என்று உட்கார்ந்திருந்தா, எல்லாருக்குமே இப்படிக் கடவுள் பணப் பைகளைப் போடுவாரா? உணவுக்கு எங்கே போவது? விதை விதையாகவேதான் இருக்கும்; விளைச்சல் இருக்காது. எதிலேயும் வளர்ச்சி இருக்காது'' — அம்மாவின் உபதேசம் அவனுக்கு எரிச்சலையூட்டியது.

என்று உற்சாகத்துடன் பணப் பையை அம்மாவிடம் கொடுத்துவிட்டு நடந்தவற்றை விவரித்தான்.

அம்மா அவ்வளவு பணத்தைப் பார்த்ததும் மலைத்துப் போய் விட்டாள். சுரேஷைக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்தெடுத்தாள். அவளுக்குப் பயம். 'போலீஸில் போய் ஒப்படைத்து விட்டு வா' என்று அவசரப்படுத்தினாள்.

சுரேஷுக்குக் கோபம்தான் வந்தது.



கடைசியில் அவளுடைய வற்புறுத்தலினால் இறங்கி வந்தான். அப்படியும் போலீஸ் ஸ்டேஷனில் போய்க் கொடுக்காமல், தோல் பையில் இருக்கும் முகவரிக்குத்தான் கொண்டு போய்க் கொடுப்பேன் என்று அடம் பிடித்தான். அன்பளிப்பாகவேனும் பணம் தரமாட்டார்களா என்ற ஆசை. 'போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைப்பதுதான் நல்லது என்று சொல்லிப் பார்த்தாள் அம்மா. சுரேஷ் கேட்பதாக இல்லை.

''சரி...சரி... நீ போய்ப் பணத்தைப் பத்திரமாக ஒப்படைத்துவிட்டு வா. நீ வந்த பிறகுதான் நான் சாப்பிட்டுவிட்டு ஊருக்குப் புறப்பட வேண்டும். பஸ்ஸுக்கு இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது'' என்று அவனை அனுப்பி வைத்தாள்.

அரை மணி நேரத்துக்குள் சுரேஷ் திரும்பி வந்தான். முகம் வாடிப்போயிருந்தது. அம்மா கேட்டதற்குஅழுகையும் ஆத்திரமுமாகச் சொன்னான்:

''அந்த ஆள் ஒரு வார்த்தை 'தாங்க்ஸ்' கூடச் சொல்லலேம்மா. அது மட்டுமில்லே, 'ஏண்டா, எத்தனை நாளா இந்த வேலை? பணத்தை அடிச்சுக்கிட்டுப் போயிடறது. போலீஸ்லே மாட்டிக்குவோமேன்னு கொஞ்சம் பணத்தை எடுத்து வைத்துக் கொண்டு ரொம்ப நல்ல பிள்ளை மாதிரி மீதத்தைக் கொண்டு வந்து நீட்டறதா? உன்னையெல்லாம் போலீஸிலே பிடிச்சுக் குடுத்தாத்தான் சரிப்படும்'னு பயமுறுத்தினாரும்மா'' — சுரேஷ் அம்மாவின் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டு அழுதான்.

அம்மாவுக்குக் கேட்கவே கஷ்டமாக இருந்தது. ஏதேதோ சொல்லி அவனைச் சமாதானப்படுத்தினாள்.

'இந்த அம்மா பேச்சைக் கேட்காமல் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டிருந்தால் இன்னேரம் ராஜா மாதிரி காரில் அவனும் அம்மாவும் ஊருக்குப் போய் அக்காவைப் பார்த்துவிட்டு வரலாமே...'


சாப்பாடே இறங்கவில்லை சுரேஷுக்கு.

இன்னிக்கு என்னைத் தேடி ஸ்கூலுக்கே வந்து விட்டார். தான் அப்படிப் பேசியதற்காக மிகவும் வருத்தப்பட்டு, பணம் எல்லாம் சரியாக இருந்தது என்று பாராட்டி, ஐநூறு ரூபாயை எனக்கென்று கொடுத்துட்டுப் போனாரம்மா'' என்றான் சுரேஷ்.

சுரேஷின் பேச்சில் அம்மாவுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

''சுரேஷ், பொய் சொல்லாதே.... இது பண விஷயம்... ஏதாவது பண்ணி வைத்தாயானால் வம்பாகப் போயிடும்'' என்று எச்சரித்தாள்.

சுரேஷ் சத்தியம் பண்ணினான். உண்மையாகத்தான்



எஸ்.ஜே.டி

இந்த நிலையில் அவனைத் தனியாக விட்டுப்போக மனமில்லாததால் ''நீயும் வாடா, ஊருக்கு'' என்று அவனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள் அம்மா.

மறுநாள் காலையே ஊரிலிருந்து திரும்பிப் பள்ளிக்கும் புறப்பட்டு விட்டார்கள் இருவரும். சுரேஷ் பள்ளி இருக்கும் தெருவிற்கு அடுத்த தெருவில்தான் அவன் அம்மா ஓர் ஆரம்ப பள்ளியில் ஆசிரியையாக இருக்கிறாள். அப்பா இல்லாததால் அம்மாதான் அவனுக்கு எல்லாம். ஒரே அக்காவும் கலியாணமாகித் தனியாகப் போய்விட்டாள்.

மாலை பள்ளி முடிந்ததும் நீண்ட நேரம் வீடு திரும்பாதிருந்தான் சுரேஷ். ஆறு மணிக்கு மேல் ஒரு புத்தம் புதிய சைக்கிளோடு திரும்பினான்.

அம்மாவுக்குத் 'திக்'கென்றிருந்தது. விசாரித்தபோது, ''அந்த ஆள், நேற்று எரிந்து விழுந்தார் இல்லேம்மா?

இருக்குமென்று மேலும் அவனை ஒன்றும் கேட்காமல் விட்டுவிட்டாள்.

மறுநாள் பள்ளி முடிந்து வீடு திரும்பிய சுரேஷ் அம்மாவிடம் இன்னொரு ஐந்நூறு ரூபாயைக் கொடுத்து அடகு வைத்திருக்கும் பாத்திரங்களை மீட்கச் சொன்னான். அம்மா பணத்தை வாங்கிக் கொள்ள மறுத்ததோடு, ''உண்மையைச் சொல். பணத்தையெல்லாம் அவரிடம் கொடுத்தாயா, இல்லை, மறைத்து வைத்திருக்கிறாயா?'' என்று அவனை அடி அடி என்று அடித்தாள்.

சுரேஷ் தேம்பித் தேம்பி அழுதபடி, ''நான் நிசமாத்தாம்மா சொல்றேன். இன்னைக்கும் வந்து அவர் ஐநூறு ரூபா கொடுத்தாரும்மா'' என்றான்.

அம்மாவுக்குப் பயமாகவே இருந்தது. மறுநாள் முழுவதும் பேயறைந்து பிடித்தவள்போலிருந்தாள்.

மறுநாள் காலை.

பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது வாசலில் போலீஸ் ஜீப் வந்து நின்றது. சுரேஷ் பயந்துபோய் அம்மாவிடம் ஒட்டிக் கொண்டான். ஒரு கான்ஸ்டபிள் சுரேஷை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் வருவதாகச் சொன்னார். சுரேஷ் பயந்துபோய் அழுதான்.

அம்மா அவனுக்குத் தைரியமூட்டிப் புறப்படச் சொல்லித் தானும் புறப்பட்டாள்.

ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர், மற்றும் சில ஜவான்களோடு ஜரிகை அங்கவஸ்திரம் போட்ட ஒருவரும் உட்கார்ந்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் சுரேஷைத் தனியாக அழைத்துச் சென்று பக்குவமாக விசாரித்தார். அவனும் எல்லாவற்றையும் சொல்லி விட்டான்.

சுரேஷுடன் இரண்டு ஜவான்களை அனுப்பி அவன் குறிப்பிடும் அந்த நபரை அழைத்து வரும்படிச் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

அவர்கள் புறப்பட்டதும், ஜரிகை அங்கவஸ்திரம் போட்ட அந்தப் பெரியவரைப் பார்த்து, ''ஸார், எங்களால் பாங்கில் உங்களிடம் பணத்தைத் திருடியவனைத்தான் பிடிக்க முடிந்தது. அவன் சொன்னதிலிருந்து வேறு யாரிடமோ களவாடிய தோல் பையில், அதில் ஒன்றுமில்லாது போகவே உங்களிடம் திருடிய பணத்தை அந்தத் தோல் பையில் போட்டு வைத்திருந்திருக்கிறான். அப்போதுதான் அதைத் தவற விட்டிருக்கிறான் என்றும் தெரிந்தது.

''நல்ல சமயத்தில் அம்மா வந்து தம்பி பணத்தைக் கண்டுபிடித்த விஷயம், தோல் பையிலிருந்த முகவரிக்குப் போய் பணத்தைச் சேர்ப்பித்தது, முதலில் அவர் திட்டியது, பின் மறுநாளும், அதற்கு மறுநாளும் தம்பியைத் தேடி வந்து அந்த ஆள் பணம் கொடுத்தது எல்லாவற்றையும் சொன்னார்கள். இவர்கள் என்னமோ தம்பி சொன்னதில் நம்பிக்கை இல்லாமல்தான் விசாரிக்கச் சொன்னார்கள். அவன் சொன்னதெல்லாம் உண்மைதான். அந்த ஆள் ஏதோ ஆசையில் பணத்தை அபகரித்துக்கொள்ள முதலில் சுரேஷை விரட்டியடித்திருக்கிறார். பிறகு அவரே பயந்துபோய் அவனைச் சரிக்கட்ட பணம் தந்திருக்கிறார்'' என்று விவரித்தார் இன்ஸ்பெக்டர்.

சற்று நேரத்தில் ஒரு மீசைக்காரரை அழைத்துக் கொண்டு சுரேஷும் ஜவான்களும் திரும்பினார்கள். மீசைக்காரர் தலைகுனிந்தபடி வந்து நின்றார்.

இன்ஸ்பெக்டர் சொன்னபடி சுரேஷ் கொடுத்த பணம்தான் அவரைத் தடுமாற வைத்திருக்கிறது.

ஜரிகை அங்கவஸ்திரக்காரரின் பணம் மீட்கப்பட்டது. சுரேஷின் அம்மா ஐநூறு ரூபாயை எடுத்து அவரிடம் நீட்டியபோது, ''அது தம்பிக்கு என் அன்பளிப்பாக இருக்கட்டும்'' என்றார்.


அம்மாவோ, ''என் பேச்சைக் கேட்டுப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்திருந்தால் அனாவசியமாக ஒருவர் பண ஆசைக்கு ஆளாகி இப்படி வந்து நிற்க வேண்டியிராதே. அவனுக்கு எதற்குப் பரிசு?'' என்று சுட்டிக் காட்டினாள்.

சுரேஷ் தலை குனிந்தான்.

இனி அவன் எப்போதும் தன் அம்மா பேச்சைத் தட்ட மாட்டான்.

மூளைக்கு வேலை

அடுத்த பக்கத்தில் ஜியாமிதிக் கோலங்கள் போலச் சில உருவங்கள் வரையப்பட்டிருக்கின்றன இல்லையா? அதேமாதிரி அமைப்புக்களைக் கறுப்பு, வெள்ளைத் தாள்களில் வரைந்து வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். இப்படி ஒவ்வொரு அமைப்பிலும் பல படிவங்கள் (Set) வெட்டிக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றையும் தனித்தனி உறைகளில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். இந்த அமைப்புக்களைக் கொண்டு பல்வேறு வகையான உருவங்களை உருவாக்கலாம். உதாரணத்துக்கு அருகே சில உருவங்களை அமைத்துக் காட்டி இருக்கிறது. முட்டையை அடைகாக்கும் பறவை, பெங்குவின், கண்டெலி, மீன், பந்தயப் படகுகள் இப்படிச் சில. இதே போல் நீங்கள் வேறு புதிய அமைப்புக்களை உருவாக்கிப் பாருங்கள். ஒவ்வொரு அமைப்பிலும் இங்குள்ள எல்லாத் துண்டுகளையும் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. தேவையானவற்றை மட்டுமே பயன்படுத்தினால் போதும். உங்கள் கற்பனைக்கும் மூளைக்கும் வேலை கொடுத்தால் எத்தனையோ விதவிதமான உருவங்களை இந்த ஜியாமிதி அமைப்புக்களைக் கொண்டு உருவாக்கலாம்.



கோடரிக் காம்பு!

கே. வேங்கடராமன்

ஊரிலிருந்து தாத்தா வந்திருந்தார், பேரன் பேத்திகளைப் பார்க்க. அவர்களுக்காக பாட்டி நிறைய முறுக்கு தேன்குழல், பொருள் விளங்கா உருண்டை, அதிரசம், சீடை, தட்டை எல்லாம் செய்து அனுப்பி யிருந்தாள். தாத்தா மூட்டையை அவிழ்த்ததுமே பட்சணங்கள் மணக்கத் தொடங்கின.

பேரன் பேத்திகள் தாத்தாவைச் சூழ்ந்து கொண்டனர்.

மருமகளைக் கூப்பிட்டுக் குழந்தைகளுக்கெல்லாம் பட்சணங்கள் எடுத்துக் கொடுக்கும்படிச் சொன்னார் தாத்தா.

அதன்படியே பாலா பட்சணங்களை எடுத்துக் குழந்தைகளுக்குக் கொடுத்தாள். அவர்கள் இரு கைகளையும் நீட்டி சந்தோஷமாக பட்சணங்களைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் சாப்பிடவில்லை.

தாத்தாவின் முகத்தையே பார்த்தன.

''என்னடா குழந்தைகளா, பாட்டி ஆசையாக செய்தனுப்பிய பட்சணத்தைச் சாப்பிடாமல் என் முகத்தையே பார்க்கிறீர்கள்?'' என்று கேட்ட தாத்தா ஒரு கணம் யோசித்து விட்டு, ''ஓஹோ! பாட்டி உங்கள் வயிற்றுக்கு உணவு கொடுத்திருக்கிறாள்! நான் உங்கள் செவிக்கு உணவு கொடுக்க வேண்டும் இல்லையா?'' என்றார்.


''ஆமாம், தாத்தா! நீ கதை சொல் தாத்தா!'' என்று எல்லாக் குழந்தைகளும் ஒரே குரலில் கூறின. ஒரே ஒரு குழந்தை மட்டும் வருத்தம் தோய்ந்த குரலில், ''அப்பாவைத் தேடிண்டு யாரோ வந்தா! அப்பா உள்ளேதான் இருந்தார். நான் அப்பா உள்ளே இருக்கார்னு அந்த ஆள்கிட்டே சொல்லிட்டேன்! அவன் அப்பாவை என்னவெல்லாமோ பேசிட்டுப் போறான்! அவன் அந்தப் பக்கம் போனதும் அப்பா என்னை கோவிச்சுண்டு, 'எனக்குன்னு வந்து பொறந்திருக்கியே கோடாலிக் காம்பு'ன்னு திட்டினார். கோடாலிக் காம்பு அப்படீன்னு என்ன தாத்தா?'' என்று கேட்டது.

''நம்மைச் சேர்ந்தவர்களாலேயே நமக்கு ஒரு கஷ்டம் வந்தால் நாம் அவர்களைப் பார்த்துக் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புன்னு சொல்லுவோம். ஒரு காட்டிலே நெறைய மரங்கள் இருந்தன.....'' என்று ஆரம்பித்தார் தாத்தா.

குழந்தைகள் கதை கேட்க ஒன்றையொன்று இடித்துக் கொண்டும் நெருக்கிக்கொண்டும் தாத்தாவைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டன.

தாத்தா சொல்லத் தொடங்கினார்.

''ஒரு காட்டில் நிறைய மரங்கள் இருந்தன. அங்கு மழை நிறையப் பெய்ததால் மரங்கள் அதிகம் வளர்ந்தன. பச்சைப் பசேலென்று இலையும் பூவும், காயுமாகப் பல



சின்ன மரங்களும், இலைகள் எல்லாம் பழுத்து, காய்ந்து உதிர்ந்து மொட்டையாக நின்று கொண்டிருந்த பெரிய மரங்களும் அக்காட்டில் இருந்தன.

நாட்டுக்கு மிகவும் தேவையான விறகுகள் காட்டிலிருந்துதானே வர வேண்டும்?.... விறகு கொடுக்கும் மரங்கள் காட்டில்தானே உள்ளன?

ஒரு விறகு வெட்டி காட்டுக்கு மரங்களைப் பார்க்க வந்தான். நன்கு காய்ந்த மரங்களையும் ஒரே வெட்டில் வீழ்த்திவிடக்கூடிய பச்சை மரங்களையும் அவன் பார்த்தான். அவைகளையெல்லாம் வெட்டி விறகாக்கி, ஊரில் கொண்டுபோய் விற்றால் நல்ல காசு கிடைக்குமே என்று எண்ணினான் அவன்.

ஆனால் அவனிடம் கைப்பிடி இல்லாத கோடரிதான் இருந்தது.

கைப்பிடி இல்லாத கோடரியைக் கொண்டு எப்படி மரங்களை வெட்ட முடியும்?

அவன் கைப்பிடி இல்லாத கோடரியைக் கையில் வைத்துக் கொண்டு மரங்களைப் பார்த்தான்.

பளபளப்பாகவும் கூர்மையாகவும் இருந்த கோடரியைப் பார்த்ததும், சின்ன மரங்கள் எல்லாம் இன்று நாம் செத்தோம் என்றெண்ணி வருந்தி அழுதன.

பெரிய மரம் அவைகளை நோக்கி, ''அழாதீர்கள்.. இவனால் இன்று நமக்கு ஆபத்து ஏற்படாது. நாம் அச்சமின்றி இருக்கலாம்!'' என்று ஆறுதல் கூறிற்று.

அது சொன்ன பிரகாரமே விறகு வெட்டி அன்று மரங்களை வெட்டாமல் சென்று விட்டான்.

உயிர் பிழைத்தோம் என்று சின்ன மரங்கள் ஆனந்தத்தில் கூத்தாடின.

'' அவசரப் படாதீர்கள்!... ஆபத்து நாளைக்குக்கூட வரலாம்!'' என்றது பெரிய மரம்.

''எப்படி?'' என்று கேட்டன சின்ன மரங்கள்.

'' நம்மாலேயேதான் !'' என்றது பெரிய மரம்.

''நம்மாலேயே நமக்கு ஆபத்தா?''

''ஆமாம்!''

''எப்படி?''

''நாளைக்குப் பாருங்கள்!'' என்றது பெரிய மரம்.

மறுநாள் விறகு வெட்டி வந்துவிட்டான். கையில் பிடியில்லாமல் நேற்று அவன் வைத்திருந்த கோடரி இப்போது 'ஜம்'மென்று அவனது இடது தோளில் தொங்கிக் கொண்டிருந்தது. மரத்தை வெட்டச் சௌகரியமாகக் கோடரியைக் கையில் பிடித்துக் கொள்ளப் பெரிய மரக் காம்பு ஒன்று இரும்புக் கோடாரியில் பொருத்தப் பட்டிருந்தது.

''இதோ பார்த்தீர்களா?... ஆபத்து வந்து விட்டது! நம்மாலேயே—நம் குலத்தைச் சேர்ந்தவனாலேயே நமக்கு ஆபத்து வந்து விட்டது!'' என்றது பெரிய மரம்.

''எப்படித் தாத்தா?'' என்று பயந்தபடி கேட்டன சின்ன மரங்கள்.


''நம்மைச் சேர்ந்த ஒரு மரமே அந்தக் கோடரிக்குக் காம்பாகிவிட்டது! அதனால் — அதன் உதவியால், — அவன் நம்மையெல்லாம் வெட்டப் போகிறான்! என்று பெரிய மரம் சொல்லிக்கொண்டிருக்கும்போதே விறகு வெட்டி கோடரியால் சின்ன மரங்களை வெட்டத் தொடங்கி விட்டான். அதிலிருந்துதான் நம்மைச் சேர்ந்தவர்களாலேயே நமக்கு ஆபத்து வரும்போது 'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே' என்று சொல்கிற பழக்கம் வந்தது!'' என்று கதையைச் சொல்லி முடித்தார் தாத்தா.

''நல்லாயிருக்கு தாத்தா கதை !'' என்று சொன்ன குழந்தைகள் பட்சணங்களைச் சாப்பிடத் தொடங்கினர்.

சின்ன வயது — பெரிய சாதனை !

1. பாடல் புனைந்து, 'பாரதி' என்ற பட்டம்பெற்ற போது 11 வயதுப் பாலகன்தான் பாரதியார். 2. ஆங்கிலப் பாக்கள் இயற்றத் தொடங்கிய போது சரோஜினி நாயுடுவுக்கு 13 வயது. 3. அரசியலில் முழுக்க முழுக்க ஈடுபட்டபோது காமராஜுக்கு 17 வயதே. 4. சுபாஷ் சந்திரபோஸ் தத்துவ விசாரணையில் மோகம் கொண்டு 17ம் வயதில் இமயமலைக்குப் போய் வந்தார். 5. சிவாஜி போர்க்களம் புகுந்தபோது அவருக்கு 19 வயது. 6. ஈசுவர சந்திர வித்யாசாகரர், 'வித்யா சாகரர்' என்ற பட்டத்தை 21வது வயதில் பெற்றார். 7. அரவிந்த கோஷ் ஐ. சி. எஸ். பட்டம் பெற்று இங்கிலாந்திலிருந்து திரும்பியபோது 21 வயது இளைஞர். 8. வெடி குண்டு வீசி வெள்ளையர் ஆட்சியையே கிடுகிடுக்க வைத்த புரட்சி வீரர் பகத் சிங் தூக்குத் தண்டனை பெற்றபோது 24 வயது நிரம்பிய வாலிபர்.

— சுதாகரன்



மின்னல்கள்

இராம. சுப்பிரமணியன்

மின்னல் என்பது சக்தி வாய்ந்த மின்சாரப் பொறியே என்பது விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட நவீனக் கருத்து. மின்சாரத்துக்கும் மின்னலுக்கும் உள்ள தொடர்பை முதன் முதலில் ஆராய்ந்து அறிந்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின் என்ற அமெரிக்க விஞ்ஞானி ஆவார்.

இடிமழை தோன்றும்போது இடிமேகம் முழுவதும் மின்னேற்றமடைகிறது. இவ்வாறு எதிர் மின்னேற்றமடைந்துள்ள மற்றோர் இடி மேகத்திற் கருகில் இம்மேகம் வரும்போது மின்சாரப் பொறி தோன்றுகிறது. இதுமேகத்துக்கும் மேகத்துக்கும் இடையே தோன்றும் மின்னல். இவ்வகை மின்னல் 20 மைல் நீளம் வரையில் இருக்கலாம். மின்னேற்றமடைந்த இடிமேகம் பூமிக் கருகில் வரும்போது, பூமியின் பரப்பில் எதிர் மின்னேற்றம் உண்டாகிறது. இடையில் உள்ள காற்று, காப்புஉறை போல இருந்து இரு எதிர் மின்னேற்றங்களும் மோதிவிடாமல் பாதுகாக்கிறது. ஆனால் சில சமயங்களில் காற்றினால் காக்க முடியாத நிலை ஏற்படும்போது, மின்சாரப் பொறி தோன்றுகிறது. இதுவே மேகத்துக்கும் பூமிக்கும் இடையே தோன்றும் மின்னல். இவ்வகை மின்னலின் நீளம் ஒருமைலுக்கும் மேல் இருக்கலாம்.

மேகத்துக்கும் மேகத்துக்கும் இடையில் தோன்றும் மின்னலால் கேடு விளையாது. ஏனெனில் இவ்வகை மின்னல் தோன்றும்போது ஏராளமான மின் சக்தி காற்றிலேயே வீணாகிவிடுகிறது. ஆனால் மேகத்துக்கும் பூமிக்கும் இடையில் தோன்றும் மின்னலால் உண்டாகும் மின்சக்தி முழுவதும் பூமியைத் தாக்குகிறது. எனவே, பூமியில் உள்ள கட்டிடம், மரம் போன்ற பொருள்களுக்கும் உயிர்களுக்கும் கேடு விளைவிக்கிறது. இதையே இடி விழுவதாகக் கூறுகிறோம்.


மின்னலின் வெப்ப நிலை 30,000 C or F டிகிரிக்கும் மேற்பட்டது. மின்னலின் பாய்ச்சல் நிகழ்ந்து முடிவதற்குப் பிடிக்கும் நேரம் நினைத்துப் பார்க்கவும் அரியதாகும். அது ஒரு விநாடியில் லட்சத்தில் ஒரு பங்கிற்கும் குறைந்ததாகும். எனவே மின்னலின் பாதையில் உள்ள காற்றும் இந்த நேரத்துக்குள் சூடேறி விரிந்து தெறிப்பதால் இடி முழக்கம் உண்டாகிறது.

கோணங்கள்!

கணித பாடத்தில் விதம் விதமான கோணங்களைப் பார்த்திருப்பீர்கள்!

நமக்கு ரொம்பவும் தெரிந்தவை அரக்கோணம், கும்பகோணம்.

ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ''கோணம்'' என்ற பெயர்கள் உள்ள ஊர்கள் ஏராளமாக இருப்பது உங்களுக்குத் தெரியுமோ?




இடி விழுவதால் கட்டிடங்கள் தீப் பற்றி எரிந்து இடிந்து பாழாகா வண்ணம் பாதுகாக்கப் பயன்படும் எளிய சாதனமாக இடிதாங்கியைப் பெஞ்சமின் பிராங்க்ளின் 1752ல் முதன் முதலில் அமைத்தார். இடிதாங்கியானது கட்டிடத்துக்கு எவ்வகைக் கேடும் ஏற்படாமல் மின்சக்தியைப் பூமிக்குள் செலுத்தி விடுகிறது.


செயற்கை முறையிலும் மின்னலை உண்டாக்க முடியும். ஒரு மைல் நீளமுள்ள ஒரு மின்னல் மின்னும்போது தோன்றும் மின் சக்தியைக் கொண்டு பல இலட்சம் மின்சார விளக்குகளை எரிக்க முடியும்; ஆனால் மின்னலால் தோன்றும் மின்சக்தியைத் தேக்கிப் பயன்படுத்த வழி ஏதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆறுபோலக் கிளை கிளையாக இட வலப்புறமாக மாறி மாறி வளைந்து வளைந்து சங்கிலி போலச் செல்லும் மின்னல் ஒருவகை. இது சங்கிலி மின்னல் எனப்படும். அடிவானம் முழுவதும் ஒருவித வடிவமும் இன்றிப் பளிச்சுப் பளிச்சென மின்னுவது மற்றொரு வகை. இது தகட்டு மின்னல் எனப்படும். முதல் வகை மின்னல் அதாவது சங்கிலி மின்னல் அடிவானத்துக்கு அப்பால் வெகு தொலைவில் தோன்றுவதனாலேயே இத்தகட்டு மின்னல் தோன்றுகிறது. கோடை காலத்தில் மாலை நேரத்தில் இடியின்றித் தகட்டு மின்னலைப் போலவே தோன்றுவது வெப்ப மின்னல் எனப்படும். வெப்ப மின்னல் அவ்வளவு பிரகாசமாக இராது. மங்கலாக இருக்கும். இவை யாவற்றையும் விட வியப்பானது பந்து மின்னல் ஆகும். பந்து போன்ற தீக் கோளம், மேகத்திலிருந்து மெல்லச் சிறிது சிறிதாகக் கீழிறங்கி வந்து பூமியில் விழுந்து உருண்டு ஓடி ஏதாவது



ஒரு பொருள் எதிர்ப்பட்டால் அதனுடன் மோதி வெடிக்கும்; அல்லது பூமியில் மோதிய உடனேயே வெடிக்கும். இவ்வகை மின்னலைப் பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.





இதோ ஊர்களின் பெயர்கள்:

மூவோட்டுக் கோணம், மருலூர்க் கோணம், வெலலூர்க்கோணம், உண்ணியூர்க் கோணம், தாடிக்காரன் கோணம், செல்லம்கோணம், அரியூர்க் கோணம், மாத்தூர்க் கோணம், மாறுங் கோணம், மாடத்தக்குக் கோணம், தம்மத்துக் கோணம், குட்டமத்துக் கோணம், வாத்தியார் கோணம், வீட்டுமேல் கோணம், கோணம்.


—ஆழ்வை அ. பட்சிராஜன்

நந்து சுந்து மந்து (24)

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்







இருபத்தாறு

✲ சூயஸ் கால்வாய் 1866ம் ஆண்டு ஜனவரி 26ந் தேதி கட்டப்பட்டது.

✲ இந்தியாவில் டெலிபோன் 1888 ஜனவரி 26ந் தேதி ஆரம்பிக்கப்பட்டது.

✲ இந்திய தேசிய காங்கிரஸ் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது 1930 ஜனவரி 26ந் தேதி.

✲ நம் நாடு குடியரசு ஆனது 1950ம் ஆண்டு ஜனவரி 26ந் தேதி.

✲ ஈன்ஸ்டீன் தமது புகழ் பெற்ற 'தியரி ஆஃப் ரிலேடிவிடி'யை அறிவித்தது தமது இருபத்தி ஆறுவது வயதில்தான்.

✲ அலெக்ஸாண்டர் உலகப் படையெடுப்பைத் தொடங்கும்பொழுது அவருக்கு வயது இருபத்தாறு.

✲ நெப்போலியன் பிரான்சைத் தன் கீழ் கொண்டு வந்தபொழுது அவரது வயது இருபத்தாறு.

✲ ஆப்ரகாம் லிங்கன் அரசியல்வாதியானது இருபத்தாறுவது வயதில்தான்.

✲ ஷேக்ஸ்பியர் தமது இருபத்தாறுவது வயதில்தான் முதல் பெரிய நாடகத்தை எழுதினார்.

✲ சர்ச்சில் எம். பி. ஆனபோது அவரது வயது இருபத்தாறு.

— பொன்மலை பரிமளம்

அரசரும் நீதியும்!

பிரஷ்யாவில் மகா பிரடரிக் (1712—1786) ஆண்ட காலத்தில் பாட்ஸ்டாம் நகருக்கு அருகில் அரண்மனை இருந்தது.


அரண்மனைக்கு அருகில் மாவரைக்கும் ஆலை ஒன்று இருந்ததால் அது காற்றைத் தடுத்ததுடன் அரண்மனையின் அழகையும் கெடுப்பதாக இருந்தது. அரசர் ஆலைச் சொந்தக்காரருக்கு ஆளனுப்பி விலை கேட்டுவரச் சொன்னார். ஆலைக்காரர் "எந்த விலைக்கும், எவருக்கும், ஆலையை விற்க முடியாது" என பதிலுரைத்தார். அரசர் கோபத்தால் ஆலையை இடித்துவிடும்படி உத்தரவிட்டார். ஆலைக்காரர் "அரசர் ஆலையை இடிக்கலாம்! ஆனால் பிரஷ்யாவில் சட்டங்களும் இருக்கின்றன என்பதை அவர் விரைவில் கண்டு கொள்வார்!" என்று கூறி அரசருக்கு எதிராக நீதிஸ்தலத்திலே வழக்குத் தொடர்ந்தார். அரசருக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டு, ஆலைக்காரருக்கு பெருந்தொகை நஷ்டஈடாகக் கொடுக்க நீதிமன்றம் ஆணையிட்டது.

அரசர் அதிர்ச்சி அடைந்து, பின் மகிழ்ச்சி அடைந்தார்; நீதிபதிகளின் நேர்மையைக் கண்டு.

—கொ. ச. பலராமன்

மந்திரக் கைக்குட்டை

'சி. ஜி'



ஒரு பெரிய பணக்காரரின் வீட்டில் ஒரு பெண் அடிமையாக வேலை செய்து வந்தாள். அவள் அழகற்றவள். ஆனால் ஆரோக்கியமான பெண். குரூபியான அவள் அடிமையாக வேலை செய்து வாழ் வதைத் தவிர வேறு வழி கிடையாது. வீட்டின் எல்லா வேலைகளையும் அவளே செய்வாள். பணக்காரரின் மனைவி, பணக்காரர் இருவரும்தான் இருந் தனர் அப்பெரிய வீட்டில். பணக்காரர் மிகக் கொடூரமானவர். அந்தப் பெண் ஏதேனும் வேலையில் சிறு தவறு செய் தாலும் சாட்டையடியைத் தண்டனை யாகக் கொடுப்பார் அவர். எதிர்க்க இயலாத அந்தப் பெண்ணோ கடவு ளிடம் தன் குறையைக் கூறி அழுவாள்.

ஒருநாள் செல்வந்தரும் அவர் மனைவி யும் வெளியே சென்றிருந்தபோது ஒரு பிச்சைக்காரன் வந்தான். அடிமைப் பெண்ணோ, ''எனது எஜமானர் பிச்சை போடுவதை விரும்ப மாட்டார். மீறி னால் எனக்குத் தண்டனை கிடைக்கும் போ'' என்றாள். ஆனால் அவனோ தன் குறைகளைக் கூறி ஏதாவது போடுமாறு மனமுருக வேண்டினான். மனம் நெகிழ்ந்த அந்தப் பெண்ணும் தானிய மூட்டையிலிருந்து சிறிது தானியத்தை எடுத்து அவனுக்குக் கொடுத்தாள். நன்றி கூறிவிட்டு அவன் வெளியேறவும், செல்வந்தரும், அவர் மனைவியும் உள்ளே வரவும் சரியாக இருந்தது. செல்வந்தர் கடுங்கோபத்துடன் அவளுடைய அந்தச் செயலுக்காக அவளுக்குப் பல சாட்டை அடிகள் கொடுத்தார். இரவு வந்தது. அடிமைப் பெண் அழுது கொண்டே கடவுளிடம் வேண்டினாள்.

திடீரென்று அவள் எதிரே கடவுள் தோன்றினார். அவளிடம் ஒரு கைக் குட்டை போன்ற ஒரு துண்டுத் துணி யைக் கொடுத்தார். ''தினமும் இதன் மூலம் உன் முகத்தைத் துடைத்து வா. நல்ல காலம் பிறக்கும்'' என்று மறைந்து விட்டார்.

அடுத்த தினம் முதல் அத்துணியை முகம் துடைக்க அப்பெண் பயன்படுத்தி வந்தாள். நாளாக நாளாக, அவள் முகம் மிகப் பொலிவு பெற்றது. பெண் மையும் அழகும் அதிகமாகிக்கொண்டே வந்தன. இதைக் கண்ட செல்வந்தர் காரணத்தைக் கேட்டார். அப்பெண் மறைக்காமல் உண்மையைக் கூறினாள். உடனே செல்வந்தர் அவளை மிரட்டி அத்துணியைப் பறித்துக் கொண்டார்.

செல்வந்தரும், அவரது மனைவியும் தினமும் அத்துணியால் முகம், உடல் ஆகியவற்றைத் துடைத்து வந்தனர். நாட்கள் சென்றன. இருவர் உடலிலும் மாறுதல் தெரிந்தது! ஆமாம், இரு வரின் முகத்திலும் உடலிலும் உரோ மங்கள் வளரலாயின. இருவரும் குரங்கு களாக மாறிவிட்டனர். மக்கள் முன் செல்ல வெட்கப்பட்டுக் கொண்டு குரங் காகி விட்ட அவ்விருவரும் காட்டுக்கு ஓடிவிட்டனர். செல்வந்தரின் பணம் முழுதும் அடிமைப் பெண்ணுக்கு உரிமை யாயிற்று. பிறகென்ன, அவள் சுக மான, அமைதியான வாழ்க்கை வாழ லானாள்!



தேன் பாடியும் மின்மினிப் பூச்சியும்

பகலெல் லாம்தன் இன்குரலால்
பாடிக் களைத்த தேன்பாடி
பகலவன் மறைந்திருள் சூழ்ந்தவுடன்
பசியால் துடித்து வாடியதே!

அங்கும் இங்கும் இருளினிலே
ஆவல் துள்ளிட விழிவீசி
எங்காவதுதன் பசிக்குணவு
இருக்கா தோவெனத் தேடியது!

மின்னி மினுக்கிடும் ஒளியதனால்
மின்மினிப் பூச்சியைக் கண்டதடா!
தன்னுடல் பசியினைத் தீர்த்திடவே
தகுந்தநல் உணவு கிடைத்ததென்றே

கவ்விப் பிடித்தது பூச்சியினை!
காலின் இடுக்கில் இருத்தியது!
எவ்வித மாயினும் தப்பிடவே
எண்ணிய பூச்சியும் பேசியது:


பளிச்சிடும் ஆற்றல் எனக்குண்டு!
பாடிடும் ஆற்றல் உனக்குண்டு!
பளிச்சிடும் ஆற்றலைத் தந்தவனே
பாடிடும் ஆற்றலும் தந்தவனும்!

எந்தன் ஒளியை நீபோற்றி
உந்தன் இசையை நான்போற்றி,
எந்த உயிர்க்கும் இடர்செய்யா
தெல்லா உயிரும் வாழ்ந்திட்டால்

இன்பம் உலகில் நிறைந்திருக்கும்
என்றது மின்மினிப் பூச்சியதும்
துன்பம் செய்தல் தீதென்றே
சொல்லிய பூச்சியின் மொழிகேட்டே

நன்றே கூறினை என்நண்பா
நான்என் உணவினை எங்கேனும்
சென்றே தேடுவன் வாழ்கென்றே
செப்பிப் பறந்தது தேன்பாடி!

''ரேமா'' சந்திரமனே



அன்னை மொழி

கண்ணே கனியே கற்கண்டே
கரும்பின் சுவையே தேன்பாகே!
பொன்னே பூவே புதுநிலவே
பூவிதழ் சிந்தும் நறுமணமே!

அன்பே அமுதே ஆருயிரே
அருந்தமிழ்க் கவியே அதன்சுவையே!
பனிமலர் அழகே பரிமளமே!
பகலவன் ஒளியே பார்த்திபனே!

தேனே இனியே தெள்ளமுதே
தெவிட்டா இன்ப வானமுதே!
மானே மயிலே மரகதமே
மல்லிகை முல்லை செண்பகமே!

முத்தே மணியே முத்தமிழே
முப்பால் கலந்த வான்மறையே
கொத்து மலர்ப் பூங்கொடியே
கொய்யா மலரின் புன்னகையே!

வானே வளமே வையகமே
வாழ்வின் சுவையே தத்துவமே
பாலே மணக்கும் பன்னீரே
பாவின் பதமே கருப்பொருளே!

தேமாங் கனியே திரவியமே
தேவன் சன்னதி ஓவியமே
கடலே நதியே கற்பகமே
கவியும் அறியாக் காவியமே!

பொதிகைத் தென்றல் பூம்பொழிலே
பொன்னொளி சிந்தும் கதிரோனே
பூரணச் சந்திரன் புத்தொளியே
பொங்கித் தவழும் கடலலையே!

முல்லைச் சரமே உன்னழகை
முழுதும் சொல்ல யாரறிவார்?
பிள்ளைக் கனியின் பேரின்பம்
பெற்ற அன்னை தானறிவாள்!

இராசமூர்த்தி



கூடாதப்பா! கூடாது!

மெத்தப் படித்து உயர்ந்தாலும்
சித்தம் மாறக் கூடாது!
முத்துப் போன்ற உள்ளத்தில்
மாசு படிதல் கூடாது!

வீட்டை நினைக்கும் நேரத்தில்
நாட்டை மறக்கக் கூடாது!
கோட்டை கட்டி வாழ்ந்தாலும்
குணத்தில் மாற்றம் கூடாது!

வறுமை துன்பம் வந்தாலும்
பொறுமை இழத்தல் கூடாது!
திறமை தன்னை ஒருநாளும்
தேக்கி வைத்தல் கூடாது!

ஏழை யாக வாழ்ந்தாலும்
கோழை யாகக் கூடாது!
நாளை நாளை என்றெதையும்
வேலை கடத்தக் கூடாது!

விரும்பு கின்ற பாதையிலே
வீணே செல்லக் கூடாது!
வரம்பு மீறி ஆசையினை
வளர்த்துக் கொள்ளக் கூடாது!

ஓடி ஒழியும் செல்வத்தைத்
தேடி அலையப் போனாலும்
நாடு போற்ற நல்லவனாய்
வாழ மறக்கக் கூடாது!

இராசமூர்த்தி

பாலைவனம்

தென்றல் காற்று வீசுமென்று
தேடி வந்த வேளையிலே
அனல் காற்று வீசியென்னை
அலற வைத்த பாலையிலே

வெட்ட வெளிப் பொட்டலென
விரிந்து கிடக்கும் வெண்மணல்
வேரூன்றி வளர்வதெல்லாம்
பேரீச்ச மரமொன்றே!

தாகமென்று வந்தவரை
தவிக்க வைக்கும் சூழ்நிலை
வேட்கை தணிய வேண்டினால்
ஏது இங்கே நீர்நிலை?

பாலை வனப் பாதையில்
பயணம் செய்ய உதவுமே
பாலைவனக் கப்பலென்று
பட்டம் பெற்ற ஒட்டகம்.

எட்டி நின்று நோக்கினால்
ஏரி குளங்கள் தெரியுமே!
கிட்டச் சென்று பார்க்கையில்
கானல் நீரெனப் புரியுமே!

அத்தி பூத்த நிலையினை
அங்கு கண்டு மகிழலாம்
பதை பதைக்கும் நெஞ்சுக்குப்
பாலைவனச் சோலையாம்!

இராசமூர்த்தி



கடத்தல்!

என். சி. சி. வகுப்பு முடிய அன்று சற்று நேரமாகி விட்டது.

குமார் பையை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி விடுவிடுவென்று நடக்கத் தொடங்கினான்.

பகலென்றும் இரவென்றும் கூற முடியாத மாலை நேரம்.

சற்றுத் தொலைவில் யாரோ ஒருவர் சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்தார். அதைத் தவிரக் கண்ணுக்கெட்டிய தூரம் ஆள் நடமாட்டமே இல்லை.

பள்ளியை விட்டுப் புறப்பட்டால் வீட்டையடையக் குமாருக்கு இருபத்தைந்து நிமிடங்கள் பிடிக்கும். கிட்டத்தட்டப் பாதி தூரத்தைக் கடந்து வந்து விட்டான் குமார்.

என். சி. சி. வகுப்பு முடிந்தவுடன் புறப்பட்டிருந்தால் மற்ற பையன்களோடு சேர்ந்து வந்திருக்கலாம். அடுத்த வாரம் என். சி. சி. முகாம் நடைபெற இருந்தது. அது சம்பந்தமாக அவசர வேலை ஒன்றை ஆசிரியர் கொடுத்து விட்டார். அதை முடித்து விட்டுப் புறப்பட்டதால் தான் இந்தத் தாமதம்.

நடையில் வேகத்தைக் கூட்டினான் குமார்.

எதிரே சாலையில் ஒரு கார் மிக வேகமாக வந்து கொண்டிருந்தது. குமார் தார்ச்சாலையை விட்டு ஒதுங்கி ஓரமாக நடக்கத் தொடங்கினான்.

வேகமாக வந்த அந்தக் கார் சடேரென்று அவனருகே வந்து நின்றது. பிறகு, பின் கதவைத் திறந்து கொண்டு இருவர் கீழே இறங்கினர்.

''தம்பி, நீ தாமோதரனின் மகன் தானே?'' என்று கேட்டான் அந்த இருவரில் ஒருவன். அந்த ஆள் பெரிய முரட்டு மீசை வைத்திருந்தான்.

''ஆமாம்'' என்றான் குமார்.

''சரி, காரில் ஏறு'' என்றான் மற்றவன்.

''ஏன்?'' என்று கேட்டான் குமார்.

''காரில் போகும் போது சொல்கிறேன்'' என்றான் முரட்டு மீசை.

அவர்களைப் பார்த்தால் நல்லவர்களாகத் தெரியவில்லை. அவர்கள் பேச்சில் ஏதோ விஷமம் மறைந்திருக்கிறது என்றெண்ணினான் குமார். பின், ''முடியாது. நான் காரில் ஏற முடியாது'' என்று கூறிவிட்டு வேகமாக நடக்கத் தொடங்கினான்.

மறுகணம், முரட்டு மீசை குமாரை அப்படியே அலாக்காகத் தூக்கிக் காரில் திணித்தான். மற்றவனும் காரில் ஏறிக் கொண்டான்.

''விடு என்னை'' என்று திமிறினான் குமார். அடுத்த விநாடி, அவன் முகத்தருகே ஒரு துணியைக் கொண்டு வந்தான் முரட்டு மீசை. அதிலிருந்து வந்த கொடிய நெடி குமாரின் நாசியில் நுழைந்ததும் தான் தாமதம் அவன் நினைவு அவனை விட்டு மெல்ல விலகத் தொடங்கியது.

குமார் மீண்டும் கண் விழித்துப் பார்த்த போது அவன் எதிரே நான்கு முரடர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அதில் முரட்டு மீசையும் இருந்தான்.

''மாறன், குமார் கண் விழிக்கிறான் பார்'' என்றான் ஒருவன் முரட்டு மீசையிடம். அதுதான் அவன் பெயர் போலும்.

மாறன், குமார் அருகே வந்து அவன் படுத்திருந்த கட்டிலில் உட்கார்ந்தான். குமார் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

''யார் நீங்கள்? என்னை ஏன் இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் குமார்.

மாறன் பெருங்குரலில் சிரித்தான். பின், ''உன்னால் எங்களுக்கு ஒரு காரியம் ஆக வேண்டும். அதனால்தான் உன்னைக் கடத்திக் கொண்டு வந்திருக்கிறோம்'' என்றான் மாறன்.

''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று எரிச்சலும் கோபமும் பொங்கக் கேட்டான் குமார்.

''எங்களுக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் தேவை. இந்தப் பணத்தை நீ உன் தந்தையிடம் வாங்கிக் கொடுக்க வேண்டும். நாங்கள் சொல்கிறபடி நீ நடந்தால் போதும். பணம் கிடைத்தவுடன் உன்னை உன் தந்தையிடம் கொண்டு போய் விட்டு விடுவோம்.''

''நீங்கள் இப்படி மிரட்டிப் பணம் பறிக்கப் பார்ப்பதைப் போலீஸ் தெரிந்து கொண்டால் உங்கள் நிலை என்னவாகும் என்பதை யோசித்துப் பார்த்தீர்களா?''

''அதைப் பற்றி நீ அனாவசியமாகக் கவலைப்பட வேண்டாம். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு நீ அதன்படி நட. அதுவே எங்களுக்குப் போதுமானது.''

''சொல்லுங்கள்'' என்றான் குமார்.

''வெரி குட், இப்போது தான் நீ நல்ல பையன்'' என்ற மாறன், ''நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொள். நீ அதை உன் தந்தையிடம் போனில் சொல். மற்றவற்றை நான்

கவனித்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு போனில் எப்படிப் பேச வேண்டும் என்பதையும், எதைப் பேச வேண்டும் என்பதையும் குமாரிடம் விவரமாக விளக்கினான்.

குமார் கவனமாகக் கேட்டுக்கொண்டான்.

போனைக் கையிலெடுத்த குமார், நான்கு முறை டயலைச் சுற்றினான். எதிர் முனையில் மணியோசை கேட்டது. யாரோ போனை எடுக்கும் சப்தமும் கேட்டது.

குமார் பேசத் தொடங்கினான்: ''அப்பா, நான்தான் குமார் பேசுகிறேன். நான் சொல்வதை நன்றாகக் காதில் வாங்கிக் கொள்ளுங்கள். என்னை நான்கு பேர் காரில் கடத்திக் கொண்டு வந்துஇங்கேவைத்திருக்காங்க. எந்த இடம்னு தெரியாது. நீங்கள் இன்று மாலை சரியாக ஐந்து மணிக்குப் பத்தாயிரம் ரூபாய் பணத்தை ஒரு பையில் போட்டு எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்படுங்க. நம் ஊரின் வடக்கு எல்லையில் இருக்கும் கெடிலம் ஆற்றின் மதகு ஓரம் பெரிய ஆல மரம் ஒன்று இருக்கிறதல்லவா? அந்த மரத்தில் கைக்கு எட்டும் உயரத்தில் ஒரு பொந்து குடையப்பட்டிருக்கும். பணப் பையை அந்தப் பொந்தில் வைத்து விட்டு நீங்கள் நேராக வீட்டிற்குப் போய் விடுங்கள். நாளை காலை என்னை நம் வீட்டில் இவர்கள் கொண்டு வந்து விட்டு விடுவார்கள். நீங்கள் போலீஸ் உதவியை நாடினால் என் பிணம்தான் நாளைக்கு உங்களுக்குக் கிடைக்கும். சரியாகப் பத்தாயிரம் ரூபாய் கொண்டு வாருங்கள். எண்ணிப் பார்க்க மாட்டார்கள் என்றெண்ணி அப்படி இப்படி என்று நூற்றி அறுபத்திரண்டு ரூபாய் குறைந்து விடாதீர்கள்.''

குமார் போனைக் கீழே வைத்தான்.

''குட்! நல்ல பையன்'' என்று குமாரின் முதுகில் மெல்லத் தட்டிக் கொடுத்தான் மாறன். பின் தன் நண்பர்களைப் பார்த்து, ''நாம் இரண்டு ரவுண்டு ரம்மி ஆடலாமே?'' என்றான்.

''நாங்கள் ரெடி'' என்றனர் மற்ற மூவரும். ஆட்டம் துவங்கியது.

சுமார் அரை மணி நேரம் கடந்திருக்கும். கதவு தட்டப்படும் ஓசை கேட்கவே, மாறன் கையிலிருந்த சீட்டுக்களைக் கவிழ்த்துக் கீழே வைத்து விட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.


வழக்கமாகச் சாப்பாடு கொண்டு வரும் பையன்தான் வந்திருப்பான் என்று எண்ணிக் கதவைத் திறந்தான் மாறன். ஆனால் வெளியே?

இன்ஸ்பெக்டர் நல்லதம்பி பத்துப் பதினைந்து கான்ஸ்டபிள்களுடன் நின்று கொண்டிருந்தார். அவர் கையில் துப்பாக்கி இருந்தது.

பிடரியில் அடிவிழுந்தது போலத் தடுமாறி நின்று விட்டான் மாறன்.

''யாரும் நகராதீர்கள்'' என்ற நல்லதம்பி உள்ளே நுழைந்தார். மற்றவர்களும் உள்ளே நுழைந்தனர்.

ஏட்டு ஏகாம்பரம் நால்வருக்கும் விலங்கை மாட்டினார்.



குமார் ஓடி வந்து இன்ஸ்பெக்டரின் அருகே போய் நின்று கொண்டான். அவனை ஆசையோடு அணைத்துக் கொண்ட இன்ஸ்பெக்டர், ''குமார், உன்னால் இன்று ஒரு கடத்தல் கூட்டமே பிடிபட்டது. அரசாங்கம் உனக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது'' என்றார்.

''குமாராவது ... உதவி செய்வதாவது ... என்ன இன்ஸ்பெக்டர் சொல்கிறீர்கள்?''' என்று கேட்டான் மாறன் ஏதும் புரியாது.

''ஆமாம்'' என்ற இன்ஸ்பெக்டர், ''குமார் டயல் செய்த போது நீங்கள் யாரும் கவனிக்கவில்லை. அவன் போன் செய்தது அவன் தந்தை தாமோதரனுக்கு இல்லை. எனக்குத் தான். என்னைப் பேசவிடாமல் அவனே பேசினான். கடைசியில் பணத்தில் நூற்று அறுபத்திரண்டு ரூபாய் குறைத்து விடாதீர்கள் என்று கூறிவிட்டு போனை வைத்து விட்டான். என் நண்பர் தாமோதரனின் மகனான குமாரின் சமயோசித புத்தியை நன்றாக அறிந்தவன் நான். எனவே அந்த எண்ணில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று முடிவு செய்துகொண்டேன். குறைக்கக் கூடாது என்று சொன்ன நம்பரைப் பத்தாயிரத்தில் குறைத்துக் கணக்கிட்டுப் பார்த்தேன். 9838 ... உங்கள் போனில் இந்த எண்ணைக் குமார் பார்த்திருக்க வேண்டும். நிச்சயம் இது போன் நம்பராகத் தான் இருக்கும் என்று யூகித்துக் கொண்டேன். பிறகு என்ன? இந்த முகவரியைக் கண்டு பிடிப்பதும், இங்கு வந்து சேருவதும் கடினமான வேலையா என்ன?'' என்று கூறி முடித்தார்.

மாறன் வெட்கித் தலைகுனிந்தான்.

''பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்தது. குரங்கு பிடிக்கக் குழந்தையாய் முடிந்ததோ!''





பிறந்த நாளில் மாலை போட்டுப் பரிசு தாருங்கோ


சிறந்து வாழ வழிவகைகள் சொல்லித் தாருங்கோ!



''எதுக்கு அப்படி முறைக்கப் பார்க்கிறீங்க? நான் ஒண்ணும் விஷமம் பண்ணலியே!''









குண்டு நாய்: ஏய். என் ஆகாரத்தைச் சாப்பிட வந்தியா?

ஒல்லி நாய்: ஓகோ! இப்படி வம்புக்கு இழுத்து என்னையே சாப்பிட்டு விடலாம்னு எண்ணமா உனக்கு?

*



பொய்ப் பல் கட்டிண்டு அவ்வளவு பெரிசாச் சிரிக்காதிங்கன்னு எவ்வளவு தடவை உங்களுக்குச் சொல்றது?





"டேய்! போஸ்ட் கிராஜுவேட்டுன்னு சொல்றாங்களே, அவன் யாருடா?"

"காலேஜிலே படிக்காமே போஸ்டல் டியூஷன்லே படிச்சுப் பட்டம் வாங்கினவங்களா இருக்கும்னு நினைக்கிறேன்!"



"நான் ஊருக்குப் போகும்போது உனக்கு ஒரு ரூபாய் தரப் போறேன்."

"இப்பவே நீங்கள் ஊருக்குப் போனால் நல்லது. வாசலில் ஐஸ்கிரீம் விற்கிறான்!"



நெரீஞ்சுக்கோ

கர்ஃப்யூ (Curfew) ஊரடங்குச் சட்டம் என்றால் என்ன?

ஜனங்கள் இரவு நேரங்களில் ஒரு குறிப்பிட்ட வேளைகளில் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். வீதிகளில் நடமாடக் கூடாது என்று போலீஸ் சில சமயங்களில் ஆணை பிறப்பிக்கும். இதற்கு ஊரடங்குச் சட்டம் — கர்ஃப்யூ என்று பெயர்.

கர்ஃப்யூ என்றால் என்ன பொருள் தெரியுமா? நெருப்பை மூடி அணை (Cover the fire) என்று அர்த்தம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவில் நிலவி வந்த ஒரு பழக்கம் இந்த கர்ஃப்யூ. அந்தக் காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் சமைக்க, கதகதப்பை உண்டு பண்ணிக் கொள்ளப் பெரிய திறந்த கணப்புக்கள் (அடுப்புக்கள்) இருக்கும். அந்தக் காலத்து வீடுகள் எல்லாம் பெரும்பாலும் மரங்களால் ஆனவை. கோதுமை வைக்கோலைக் கொண்டு வேயப்பட்ட கூரைகள். இப்படிப்பட்ட வீடுகளில், பாதுகாப்பற்ற திறந்த அடுப்புக்களிலிருந்தோ அல்லது புகைபோக்கி வழியாகவோ ஒரு பொறி பறந்து வைக்கோல் கூரை மீது விழுமானால் என்ன ஆகும்? சொக்கப்பனைதானே? ஒரு வீடு தீப்பற்றிக் கொண்டால் ஊரே தீ விபத்துக்கு இலக்காகுமல்லவா? அந்தக் காலத்தில் நெருப்பணைக்கும் யந்திரங்கள் கிடையாது. கிணறு, குளம், குட்டை, ஏரி ஆகியவற்றிலிருந்து தண்ணீரைக் கைகளால் கொண்டு வந்து தான் நெருப்பை அணைத்தாக வேண்டும். ஆகவே தீ விபத்துக்களைத் தடுக்க ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இரவு தூங்கப் போகுமுன் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டு அடுப்பை அணைத்து விட்டுப் படுக்கப் போக வேண்டும் என்பதுதான் அந்தச் சட்டம். அடுப்புக்களை அணைக்க வேண்டிய நேரம் என்பதை ஜனங்களுக்கு அறிவித்து எச்சரிக்கக் குறிப்பிட்ட நேரத்தில் மணி ஓசை எழுப்புவார்கள். இந்த மணி ஓசை எழுப்பப்படும் போது யாராவது வீதியில் இருப்பார்களானால் அவர்கள் உடனே வீட்டினுள் சென்று அடுப்பு அணைக்கப்பட்டு விட்டதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அடுப்பை அணைத்து நெருப்பைப் பாதுகாக்கும் பழக்கமும் அவசியமும் இப்போது இல்லாவிட்டாலும் இரு கோஷ்டிகளுக்கிடையே பூசல் நேரும் சமயங்களில் யாரும் இரவு வேளைகளில் வெளியே வரக் கூடாது என்று தடை விதிக்க 'கர்ஃப்யூ' போடுகிறார்கள். பண்டைக் காலத்தில் நெருப்பைக் குளிரச் செய்ததுபோல இப்போது கோபத்தையும் குரோதத்தையும் பழி வாங்கும் குணத்தையும் சமனப்படுத்தக் கர்ஃப்யூவைப் பயன்படுத்துகிறார்கள்.



பிடித்ததும் பிடிக்காததும்

உங்கள் குடும்பத்தில் உங்களுக்கு மட்டும் வெங்காயத்தைக் கண்டால் ஆகாது. உன் தங்கை சீதாப் பழத்தைக் கண்டால் சீறி விழுவாள். அநேகமாக ஒவ்வொருவரும் சில உணவுப் பொருள்களை விரும்புவார்கள், சிலவற்றை வெறுப்பார்கள். இந்தக் குணம் ஏற்படுவது எப்படி?

முதன் முதலில் ஓர் உணவுப்பொருளை உண்ணும் போதோ உண்ட பிறகோ ஏற்படும் விளைவுகளே அந்த உணவுப் பொருள் மீது விருப்பையோ வெறுப்பையோ தோற்றுவிக்கிறது. முதன் முதலில் நீங்கள் வெங்காயத்தைச் சாப்பிட்ட பிறகு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டிருக்கலாம். அதன் பிறகு வெங்காயம் என்றாலே உங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கும். முதல் அனுபவம் ஏற்பட்டுப் பல மாதங்களானாலும்கூட வெங்காயத்தின் வாசனையைக் கண்டாலே உங்களுக்குக் குமட்டல் வரும். அப்படியொரு வெறுப்பு. உன் தம்பிக்கு ஆரஞ்சு ஸ்குவாஷ் என்றால் அபார மோகம். மூடி

யைத் திறந்ததுமே குபுகுபு என்று நுரைத்துப் பொங்கும் வாயுவைக் கண்டாலே குதிபோடு வான் குடிக்க. மடமடவென்று குடித்து மகிழுவான்.

ஆனால் அதே ஆரஞ்சு ஸ்குவாஷைக் கண்டால் உன் நண்பன் சந்துரு முகம் சுளிக்கிறான். ஏன் ? முதன் முதலாக அதை அவன் குடித்த போது பழக்கமில்லாத காரணத்தினால் குப்பென்று மூக்கிலே வந்து ஏறும் ஏப்பத்தைச் சமாளிக்க முடியாமல் புரை ஏறிக் கொள்ள; கீழுள்ள விரிப்பு நாசமாக; வீட்டில் உள்ள பெரியவர்கள் கடுகடுக்க. அதனால் ஏற்பட்ட கசப்பான அனுபவம் ஆரஞ்சு ஸ்குவாஷைக் கண்டாலே சந்துரு முகம் சுளிக்கிறான். வெறுப்பும் விருப்பும் மனத்தளவிலே உருவானவைதான்.

சமுதாயத்தில் சிலர் புலால் உணவு வகைகளை வெறுப்பதற்கும் இதுவேதான் காரணம். வழி வழியாகத் தொன்று தொட்டு மத, இன அடிப்படையில் புலால் வகை உணவுகளைச் சிலர் ஒதுக்கி வாழ்கிறார்கள். பழக்கத்தின் காரணமாக அப்படி ஒதுக்கப்பட்ட உணவுப் பொருளின் பெயரைக் கேட்டாலே வெறுப்பாக இருக்கும் அவர்களுக்கு.



சொத்தைப் பல்

உங்கள் பல்லிலே சொத்தை இல்லை, குழி இல்லை. ஆனால் ஐஸ் கட்டியைக் கடிக்கும் போது பல்லைக் கூசுகிறது. ஏன் ? பற்களுக்குள்ளே இருக்கும் நுண்ணிய நரம்புகள் உணர்ச்சி மிக்கவை. அவற்றால் பனிக் கட்டியின் குளிர்ச்சியைத் தாங்க முடிவதில்லை. ஐஸ்கிரீம் பட்டதும் தாங்க முடியாத குளிர்ச்சி அடைந்த நரம்புகள் வலி உணர்வை மூளைக்கு அனுப்புகின்றன.

ஐஸ் கட்டியை விழுங்கியபிறகும்கூட பல் கூச்சமும் வலியும் வெகு நேரம் நிலைத்திருக்கும் இல்லையா ? இது ஏன் ? ஏனென்றால் ஐஸ் கிரீம் பல் முழுவதையும் மிகமிகக் குளிரச் செய்து விட்டது. அது தனது இயல்பான கதகதப்புக்கு வரச் சிறிது நேரமாகும். இதனிடையில் நரம்பு மண்டலம், குளிர் வலிச் செய்தியை மூளைக்குத் தொடர்ந்து அலை அலையாக அனுப்பிக் கொண்டிருக்கிறது. இதுவே ஐஸ் விழுங்கிய பின்பும் வெகு நேரம் வரை வலியோ கூச்சமோ தொடருவதற்குக் காரணம்.

உங்களில் சிலருக்குப் பற்களில் குழி விழுவதற்குக் காரணம் என்ன? பல் வைத்தியர்கள் இதற்கான பல காரணங்களைக் கூறினாலும் முக்கியமாக நான்கை வற்புறுத்துகிறார்கள்.

முதலாவது கிருமிகள். உணவுப் பொருள்களை வேறு பொருள்களாக மாற்றும் பாக்டீரியாக்கள். இந்தப் பாக்டீரியா நம் வாயிலேயும் இருக்கிறது. ஆனால் பற்களைக் குடைந்து விடும் பாக்டீரியாக்களைப் பற்றி யாரும் கேள்விப் பட்டிருக்க முடியாதே!

இரண்டாவது — சில ரசாயனங்கள். அமிலங்கள் உறுதியான கருங்கற் பாறைகளையே பொடிக்கும் வல்லமை பெற்றவை. பற்களின் கெட்டியான வெளிப்புறத்தை இந்த அமிலங்கள் சுலபமாகக் கரைக்கக்கூடியவை. ஆனால் நம் வாயில் ஊறும் ஸலைவா என்னும் உமிழ் நீருக்கு இத்தகைய அமில குணம் கிடையாதே!

மூன்றாவதாகச் சர்க்கரை. சர்க்கரைப் பொருள்களான தித்திப்புப் பதார்த்தங்களை அதிகம் சாப்பிடுபவர்களின் பற்களில் குழிகள் விழுகின்றன.

நான்காவது — பல் தேய்த்தல். ஆம், அடிக்கடி பற்களைத் துலக்குவதினாலும் பற்களிலுள்ள இயற்கையான எனாமல் பூச்சு தெறித்துப் போய்ச் சிறு ஓட்டைகள் விழும்.

நமது வாயில் உள்ள உமிழ் நீரும் பாக்டீரியாவும் உணவோடு கலக்கின்றன. இந்தக் கலவை கெட்டியான பூச்சாகப் பற்களில் படிகின்றன. இந்தப் பாக்டீரியா இருக்கிறதே அது தன்னுடன் சேர்ந்துள்ள உணவிலிருக்கும் எல்லாச் சர்க்கரையையும் ஜீரணிக்கவல்லது. இப்படி இது சர்க்கரையை ஜீரணிக்கும் போது இதில் கொஞ்சம் சர்க்கரையை அமிலமாக மாற்றுகிறது. பற்களில் படிந்துள்ள பசை போன்ற இந்த உணவுப் பூச்சு ரசாயன மாற்றம் ஏற்பட்டு அமிலம் உற்பத்தியாகும் போது அந்த அமிலம் பறகளின் கெட்டியான பகுதியைச் சாப்பிட ஆரம்பிக்கிறது. இந்தச் செயல் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக நடைபெறுகிறது. நாளடைவில் குழியும் விழுகிறது.

இதைத் தடுக்க முடியாதா? முடியும். ஒவ்வொரு முறை சாப்பிட்டதும் மிருதுவான பிரஷ் கொண்டு பல் துலக்கிப் பற்களின் மீது படிந்துள்ள அழுக்குப் பூச்சை அகற்றினால் அமிலம் பற்களில் தங்கும் வாய்ப்புக் குறையும். பற்களில் குழி விழுவதும் நீங்கும்.



மாய மோதிரம்

வாண்டு மாமா

6

மன்மதவர்மரின் மெய்க் காவல் படையின் தலைவனாக விஜயன் பொறுப்பேற்றுப் பல மாதங்களாயின. மன்னரும் மற்றையோரும் அவனிடம் அன்பாக இருந்தனர். அவன் வீரத்துக்கு மதிப்பளித்தனர். அவன் திறமைகளைப் பாராட்டினர். குபேரபுரியிலே அவன் உடல் இருந்தது. ஆனால் உள்ளமோ புவனாவின் நினைவாகவே அலைந்தது.

மன்னரின் சகோதரி அமுதா விஜயனின் நினைவாகவே இருந்தாள். அவள் சகோதரன் நாகவர்மனுக்கு வாக்களித்தபடி விஜயனைச் சந்திக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டாள். இளவரசி என்ற நினைப்போடு அவளிடம் மரியாதையோடு பழகினான் விஜயன். அமுதாவின் விருப்பம் எதுவானாலும் அதை நிறைவேற்றி வைத்தான். அதற்கு அவள் மன்னரின் சகோதரி என்பதோடு அவள் ஒரு பெண், அதுவும் அழகி என்பதும் காரணமாக இருந்தது. அமுதா அவனிடம் அன்போடு பழகினாள். அடிக்கடி அவனைச் சந்திப்பதில் ஆர்வம் காட்டினாள். உள்ளத்தில் எவ்வித விகல்பமுமின்றிப் பழகினான் விஜயன். ஒரு நாள் புள்ளிமான் குட்டி வேண்டும் என்பாள். இன்னொரு நாள் புலிக் குட்டி கொண்டு வா என்பாள். 'என் தோட்டத்திலே மயில் தோகை விரித்தாடினால் எவ்வளவு அழகாக இருக்கும்?' என்பாள். அமுதாவின் ஆசைகளையெல்லாம் மகிழ்ச்சியோடு நிறைவேற்றி வைப்பான் விஜயன். ஆனாலும் அவன் மனத்தில் அவள் மரியாதைக்கு உரியவளாகத்தான் விளங்கினாள்.

சூழ்ச்சிக்காரன் நாகவர்மன் அமுதாவைப் பார்க்க வந்தான்; தன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான சூழ்நிலை உருவாகிவிட்டதா என்பதை அறிந்து கொள்ளுவதற்காக.

''என்ன அமுதா, உன் காதலன் விஜயனை எந்த நிலையில் வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

அமுதாவின் பதில் உற்சாகமாக இல்லை. ''என்னிடம் மதிப்பும் மரியாதையும் காட்டுகிறார். என்வார்த்தைகளை ஆணை

யாக ஏற்றுக் கொள்ளுகிறாரே தவிரக் காதலியின் விருப்பமாக எண்ணி ஈடுபாடு காட்டுவதில்லை. சரளமாகப் பேசிப் பழகு கிறார். என் செயல்கள் எதையும் சகஜ மாகவே எடுத்துக் கொள்கிறார். ஆனால் தன் இதயத்திலே எனக்கு நான் எதிர் பார்க்கும் அந்த இடத்தைத் தரவில்லை. விரோதிகளால் வெல்ல முடியாத உடல் உறுதியைப் பெற்றிருப்பதைப் போலவே பெண்களின் ஆசைகளும் சாகஸங்களும் வெற்றி கொள்ள முடியாத உள்ளத்தையும் கொண்டிருக் கிறார். தன் காதலியிடம் உண்மையாக வும் இருக்கும் இவர் எண்ணத்தை மாற்ற என்னால் முடியும் என்று தோன்றவில்லை. நீங்கள் ஏதோ 'சவால்' விட்டீர்களே, ஆனால் எனக்குச் சந்தேக மாகத்தான் இருக்கிறது'' என்றாள் அமுதா.

அவள் சொல்வதை யெல்லாம் விஷமச் சிரிப்புடன் கேட்டுக் கொண் டிருந்த நாகன், ''அமுதா இன்னும் இரண்டு நாளில் மகத நாட்டிலிருந்து மற்போரில் வல்லவன் ஒருவன் வரு கிறான், தெரியுமல்லவா ?'' என்றான்.

''அதுவும் தெரியும், அதற்கு மேலும் தெரியும். அந்த மகத நாட்டு வீரனுடன் மற்போர் புரியப் போகிறான் விஜயன். போன மாதம் அரபு நாட்டி லிருந்து வந்திருந்த வீரனுடன் வாட் போர் புரிந்து வெற்றி கொண்டு நம் மன்னருக்குப் புகழ் சேர்க்கவில்லையா ? அதே போலத்தான் நடக்கவிருக்கும் மற்போரிலும் மகத நாட்டு மல்லனை மண் கவ்வச் செய்து நமக்கு மகிமை தேடிக் கொடுக்கப் போகிறான்.''

''அடேயப்பா ! காதலன் புகழ் பாடுவதில்தான் பெண்கள் எத்தனை கைதேர்ந்தவர்களாகி விடுகிறார்கள் ?''


''அண்ணா புகழப்படுவதற்குத் தகுதி யில்லாதவர்களைப் புகழ்ந்தால் நீங்கள் பொறுத்துக் கொண்டா இருப்பீர்கள்? அரபு நாட்டு வீரனை அன்று எப்படி அலமங்க வைத்தார் என்பதை நீங்களும் தானே பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?''

''உன் விஜயனின் வீரத்தைக் குறை வாகச் சொல்லவில்லை அமுதா. அவனை உன்னுடையவனாக்கி வைக்க வேண்டும் என்பதற்காகத்தானே வந்திருக்கிறேன். மற்போரிலேயும் வெற்றி வீரனாக வரப் போகிறான் விஜயன். அப்போது அவ னுக்கு உன் கையால் ஒரு பானத்தைக் கொடுக்க வேண்டும். அது அபூர்வ மான மூலிகைகளால் என் அமுதாவின் ஆனந்த வாழ்வுக்காகவே நான் தயா ரித்தது. அதை அவன் குடித்த பிறகு என்ன நடக்கப் போகிறது என்பதை நீயே பார்க்கப் போகிறாய்'' என்று அமுதாவை மகிழ்ச்சி வெள்ளத்திலே மிதக்க வைத்துவிட்டு விடைபெற்றுக் கொண்டான் நயவஞ்சகனான நாகன்.

தோள் தட்டித் தொடை தட்டிக் கச்சையணிந்து மகத நாட்டு மல்லனைக் களத்திலே எதிர்கொண்டான் விஜயன். கட்டுமஸ்தான உடல் கொண்ட இரு வரும் கட்டிப் புரண்டார்கள். திரண்ட தோள்களைத் தட்டிக் கொண்டு மலை யோடு மலை மோதுவதைப் போல் மோதி உருண்டார்கள். உடலின் பளுவினால் ஒருவரை ஒருவர் அழுத்தி அயர வைக்க முயன்றார்கள். மல்லர் களின் பெருமூச்சும் ஹூங்காரமும் தவிர அரங்கிலே வேறு அரவமே இல்லை. அத்தனை அமைதியாக இருந் தது. முடிவிலே மகத நாட்டு மல்லனின் உடலைத் தூக்கித் தரையில் வீசி மல் லாத்தி முதுகுக்கு மண் கட்டினான், விஜயன். அப்படி விழுந்த மகதநாட்டு மல்லன் பிறகு எழுந்திருக்கவே இல்லை. மூர்ச்சையாகிப் போனான். வியர்வை யும் புழுதியும் படிந்த உடலோடு மத யானையைப் போலக் கம்பீரமாக நின்ற விஜயனைக் குபேரபுரி மக்கள் குதூகல ஆரவாரமிட்டபடி தூக்கிக் கொண்டு களிக்கூத்தாடினார்கள். நகரமே மகிழ்ச்சி வெள்ளத்திலே மிதந்தது. நகர மாந்தரின் பேச்சும் ஒப்பற்ற வீரன் விஜயனைப் பற்றியே இருந்தது.

குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்த விஜயன் தனக்காக இளவரசி அமுதா காத்திருப்பதைக் கண்டு திகைத்துப் போனான். ''சொல்லி அனுப்பி இருந்தால் நானே தங்களைத் தேடி வந்திருப்பேனே. இளவரசியார் எனக்காக இங்கு...'' என்றவனை மேலே பேச விடவில்லை அமுதா.

''இன்று இந்த நாட்டு மக்களின் பேச்செல்லாம் உங்களைப் பற்றிய தாகவே இருக்கிறது. இத்தகைய வீர ரைப் பெற்றதற்காகக் குபேரபுரி கர்வ மடைகிறது. அரசர் உங்களைத் தக்கபடி பாராட்டவும் கௌரவிக்கவும் செய்யப் போகிறார். அதற்குமுன் நான் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளவே இங்கு வந்தேன். உங்களைவிடத் தோற் றத்தில் இரு மடங்கிருந்த மகத நாட்டு மல்லன் முதுகுக்கு மண் காட்டிய இந்த உடலின் வலிகள் போகவும் வல்லமை பெறவும் மூலிகைகளினாலாகிய உயர்ந்த பானம் ஒன்றை உங்களுக்காகவே கொண்டு வந்திருக்கிறேன். இதை அருந்துங்கள். உடல் அயர்வு போகும். புதிய தெம்பும் பலமும் கூடும்'' என்று கூறியபடி பொற் கிண்ணத்தை விஜயன் முன் நீட்டினாள் அமுதா.



மகிழ்ச்சியோடு அமுதா அளித்த பொற் கிண்ணத்தை வாங்கிக் கொண்டான். நாகவர்மன் தயாரித்துக்கொடுத்திருந்த அந்தப்பானம், ஒரு மனிதனின் கடந்த கால நினைவுகளையே மறக்கச் செய்யும் சக்தி பெற்றது. அந்த உண்மை அறியாத விஜயன் அதை வாங்கிக் குடித்தான். தன் நன்மைக்காகத்தான் தன் சகோதரன் அப்படியொரு பானத்தைத் தயாரித்துத் தருகிறான் என்று நம்பினாள் அமுதா. ஆனால் அதன் பின்னால் உள்ள நாகனின் சூழ்ச்சி பற்றி அவளுக்குத் தெரியாது. தெரிந்திருக்குமானால் விஜயனுக்கு அப்படியொரு பானத்தைத் தன் கையால் அவள் கொடுத்திருக்கவே மாட்டாள்.

தான் அளித்த பானத்தை விஜயன் அருந்தியதுமே, ''உங்களை விருந்து மண்டபத்திலே சந்திக்கிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டாள் அமுதா. அந்த அதிசய பானம் விஜயனின் பழைய நினைவுகளையெல்லாம் அவன் சிந்தையிலிருந்து அழித்தன. திடீரென்று விவரிக்க முடியாததொரு மோகம் அமுதாவின் மீது ஏற்பட்டது. 'அமுதா.... அமுதா...! ஆஹா அவள்தான் என்ன அழகு, ஒயில்?' என்று அவன் வாய் முணு முணுக்க விருந்து மண்டபத்தை நோக்கி வேகமாக நடந்தான். விருந்தை விட, வீர விளையாட்டிலே வெற்றி பெற்றதற்கு மன்னர் அளிக்கவிருக்கும் பாராட்டை விட, அமுதாவைக் காண வேண்டும் — அவளோடு பேச வேண்டும் என்ற தவிப்புத்தான் இப்போது அவனிடம் மேலோங்கி நின்றது.

விருந்து மண்டபத்திலே விஜயனின் பார்வையிலே ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு இரு உள்ளங்கள் மகிழ்ந்தன. ஒன்று அமுதா, மற்றது நாகவர்மன். அமுதாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் விஜயன். எந்தப் பார்வையை அவனிடம் அமுதா விரும்பினாளோ அந்த மோகம் நிறைந்த தாபம் நிறைந்த, தவிப்பும் ஏக்கமும் கலந்த பார்வையை விஜயன் வழிய விட்டுக் கொண்டிருந்தான். அடிக்கடி அவள் அருகே வந்தான். அவளோடு பேசத் துடித்தான். அமுதாவிற்கு அவன் நிலை இன்பமாக, மகிழ்ச்சியாக, மனத்துக்கு இதமாக இருந்தது. ஒயிலாக ஒதுங்கிப் போனாள். மோகனமான முறுவலை அவன் மீது வீசினாள். நாணத்துடன் களுக்கென்று சிரித்து ஒதுங்கினாள். விஜயனை ஏங்க வைத்தாள். மத யானையைப் போன்றிருந்தவனை மான் குட்டியாக்கி விட்டது நாகவர்மனின் அதிசயப் பானம்!

அமுதாவின் ஆனந்தத்தையும் விஜயனின் பரிதாப நிலையையும் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த நாகன் விருந்து முடிந்து விடுதிக்குத் திரும்பும் போது தற்செயலாகச் செல்வது போல விஜயனின் அருகே சென்றான். அவனைச் சந்திக்கக் காத்திருந்தவனைப் போல விஜயன் ஓடோடி வந்து ஒட்டிக் கொண்டான். இருவரும் பேசிக் கொண்டே நடந்தார்கள். விஜயன் அமுதாவின் மீது தான் கொண்டுள்ள காதலைக் கூறினான். ''இளவரசியை எனக்கு மனைவியாக்கி வைப்பாரா மன்னர்? என்னைத் தன் குடும்பத்தில் ஒருவனாக்கிக் கொள்ளும் எண்ணத்தை அவர் உள்ளத்தில் உருவாக்க உங்களால்தான் முடியும். அமுதாவை நான் அடைவதற்கு நீங்கள் தான் எப்படியாவது உதவ வேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான் விஜயன்.



நாகவர்மன் நெஞ்சுக்குள் சிரித்துக் கொண்டான் வஞ்சகமாக. 'பயல் வசமாக மாட்டிக் கொண்டான்' என்று பூரித்தது உள்ளம். தன் சூழ்ச்சி வலையை விஜயன் மீது வீசினான்.

''வீரனே! மன்னர் மன்மத வர்மருக்கு இன்னும் மணமாகவில்லை என்பது தெரியுமல்லவா உனக்கு? நாங்கள் எல்லாரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டோம். ஆனால் அவர் மனம் மாறவில்லை. அவர் உள்ளத்திலே இடம் பெற்றிருக்கிறாள் ஓர் அழகி. அவளையின்றி அவர் வேறு யாரையும் மணக்க மாட்டார். அது எனக்கு மட்டுமே தெரியும். எப்படியாவது அரசரைத் திருமணத்துக்கு நீ சம்மதிக்கச் செய்வாயானால் நானும் உன் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன்'' என்றான் நாகன்.

''அரசரின் அந்தரங்கத்திலிடங் கொண்ட ஆரணங்கு யார், எங்கிருக்கிறாள்? கூறுங்கள்'' என்றான் விஜயன்.

சில விநாடிகள் மௌனமாக நடந்தான் நாகன். புவனாவின் பெயரைக் கூறினால் இவன் நினைவின் தன்மையை அறியலாம் என்ற முடிவோடு ''புவனா என்று பெயர். சாதாரண மானிடப் பெண்ணல்ல. குபேர புரியிலிருந்து பல காதங்களுக்கு அப்பாலுள்ளதொரு கானகத்தில் ஒரு குகையில் வசிக்கிறாள் அந்தக் கந்தருவக் கன்னி. அவளுக்கு நிகரான அழகியை இந்த நில உலகில் காண முடியாது'' என்றான் நாகன்.

''புவனா... பெயரே அழகாக இருக்கிறதே. அந்தக் குகைக்குச் செல்லும் மார்க்கம் உங்களுக்குத் தெரியுமல்லவா?''

''தெரியும். ஆனால் அதற்கு முன் மன்னரின் மனத்தையும் அவர் இசைவையும் பெற்றாக வேண்டும்'' என்றான். புவனாவின் பெயரைக் கேட்ட பின்னரும் கூட விஜயனின் சிந்தனையிலே எவ்வித சலனமும் ஏற்படாததைக் கண்டு குதூகலமடைந்தான் வஞ்சகனான நாகன்.

''அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். விரைவிலேயே புவனாவைச் சந்திக்க நாம் கிளம்புவோம்'' என்று விடைபெற்றுக் கொண்டான் விஜயன்.

மன்மத வர்மரிடம் போய் இவ்வளவு புகழ் வாய்ந்த சாம்ராஜ்யத்துக்கு அதிபராக உள்ள அவர் இன்னமும் திருமணம் செய்து கொள்ளாதிருப்பது முறையல்ல என்று வற்புறுத்தினான் விஜயன். ''பட்டத்து ராணியை நாட்டு மக்களும் விரும்புகிறார்கள். உங்கள் வீரத்துக்கும் புகழுக்கும் ஏற்ற ஒரு பெண் இருக்கிறாள். புவனா என்று பெயர். பிரமிப்பூட்டும் அழகியவள்'' என்றெல்லாம் கூறி மன்னரைத் திருமணத்துக்குச் சம்மதிக்கச் செய்து விட்டான் விஜயன். யாரைக் கணவனாக அடைய வேண்டுமென்று புவனா தீயின் நடுவே துயில் கொண்டிருந்தாளோ, யாருடைய வரவை எதிர்நோக்கிக் குகையில் காத்திருக்கிறாளோ அந்த அவனே, அவளை இன்னொருவனின் மனைவியாக்கி வைக்க முயற்சி செய்கிறான். இந்த விபரீதம் ஏன்? மாயத் தங்கத்தின் சாபம் அப்படி. புவனாவைச் சந்திக்க மன்னரும் நாகனும், விஜயனும் வேறு சிலரும் கிளம்பினார்கள். நாகவர்மன்தான் எல்லாரையும் வழி நடத்திச் சென்றான். விஜயன் அருந்திய விஷ பானம் அவனுக்கு அவன் வந்த பாதையெல்லாமே புதியதாகக் காட்டியது. அப்படியொரு மாயத்திரை அவன் நினைவை மூடி இருந்தது.

பல நாள் பிரயாணத்துக்குப் பிறகு எல்லாரும் புவனா தங்கியுள்ள குகைக்கு வந்தார்கள். நாகனுடைய சூழ்ச்சியின் உச்சக் கட்டம் இங்குதான் சிகரமாக அமைந்தது. ''நாமெல்லாம் குகைக்கு வெளியே இருப்போம். அந்தக் கந்தருவக் கன்னியிடம் பேசி, அவள் நம் மன்னரை மணக்கச் சம்மதிக்கச் செய்யும் சாகஸம் விஜயன் ஒருவனுக்குத் தான் உண்டு. ஆகவே அவன் மட்டும் குகையினுள் சென்று வெற்றியோடு திரும்பட்டும்'' என்றான். புவனாவின் நினைவு விஜயனிடம் அழிந்திருந்தாலும் புவனா அவனைக் கண்டதும் தன் காதலன் என்ற மகிழ்ச்சியில், செயல்படுவாளே? அதை மன்னரும் மற்றவர்களும் காண்பார்களானால் விபரீதமாகி விடுமே என்று தான் விஜயனை மட்டும் உள்ளே அனுப்புவதற்கு இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்தான் நாகன்.

விஜயனின் வீரத்திலும் சாதுரியத்திலும் நம்பிக்கை கொண்ட மன்மத வர்மர் நாகனின் யோசனைக்கு மறுப்புக் கூறவில்லை.

யாரோ ஓர் அந்நியப் பெண்ணை, முன் பின் பார்த்தறியாத ஒருத்தியைச் சந்திக்கப் போவதைப் போல விஜயன் குகையினுள் புகுந்து நடந்தான். மன்னருக்கே தான் பெண் பார்க்கப் போகிறோம் என்ற உவகையினால் அவன் உள்ளம் பூரித்திருந்ததே தவிரத் தன் காதலியைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சி அவன் மனத்தில் ஏற்படவே இல்லை.

காதலனின் வரவை எதிர்பார்த்துத் தவங்கிடந்த புவனா தன்னை நோக்கி வரும் விஜயனைக் கண்டதும் தாவி ஓடி வந்தாள். ஆனால் அவனோ எவ்விதச் சலனமுமின்றி அவளை இதற்கு முன் பார்த்தே இராதவனைப் போல வந்து வணங்கினான்; அன்னியப் பெண் ஒருத்திக்குக் காட்டும் மரியாதையுடன். ஆவலோடு ஓடி வந்த புவனா அதிர்ச்சியுடன் இரண்டடி பின்வாங்கினாள்.

''பெண்ணே! குபேர புரியின் மன்னர் மன்மத வர்மரின் மெய்க்காவலன் நான். உன்னை அவர் தம் பட்டமகிஷியாக்கிக் கொள்ள விரும்புகிறார். உன் கரம்பற்றித் தம் இதயத்திலே உன்னை ஏற்றி வைத்துக் கொள்ளக் காடு மலையெல்லாம் கடந்து வந்து உன் குகை வாசலில் காத்திருக்கிறார். அவரிடம் உன்னை அழைத்துப் போகவே நான் வந்திருக்கிறேன்'' என்றான் விஜயன்.

இதைக் கேட்ட புவனாவிற்கு எப்படி இருக்கும்? தன் காதுகளைப் பொத்திக் கொண்டாள். நெஞ்செல்லாம் தீயாக எரிந்தது. உடல் நடுங்கியது. 'இந்த வீரனுக்கு, என்னைத் துயில் எழுப்பிய இந்த விஜயனுக்கு என்ன வந்தது? ஏன் இப்படியெல்லாம் பேசுகிறான்? என்னைத் தெரிந்து கொண்டதாகவே காணோமே!' புவனாவின் உள்ளம் அலை பாய்ந்தது. பேச முடியாமல் துக்கம் அடைத்தது. சிரமத்துடன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''நீங்களல்லவா என்னை மணப்பதாகக் கூறி இந்த மோதிரத்தையும் என் விரலில் அணிவித்து விட்டுச் சென்றீர்கள். மறந்து விட்டதா?'' என்று கேட்டாள் புவனா.

''நான் மணக்கப் போவது என் மன்னரின் சகோதரி அமுதாவை. அவருடைய திருமணத்துக்குப் பிறகே எங்கள் திருமணம். நீங்கள் சொல்வது எனக்குப் புதுமையாக இருக்கிறது'' என்றான் விஜயன். திக்பிரமையடைந்து போன புவனா, விஜயனையே மௌனமாகப் பார்த்தாள் சில விநாடிகள். அவள் கந்தருவ மங்கை. கேவலம் மானிடப் பெண்ணல்லவே. அதிர்ச்சி நீங்கியதுமே ஆத்திரம் பொங்கியது அந்த அழகியின் நெஞ்சிலே. ''அப்படியானால் இதோ இந்த மோதிரத்தை நீங்கள் மணக்கக் காத்திருக்கும் உங்கள் காதலியின் விரல்களிலே போட்டு அழகு பாருங்கள்'' என்று கூறித் தன் விரலில் அவன் அணிவித்த மாயத் தங்கத்திலான மோதிரத்தைக் கழற்றி வீசி எறிந்தாள்! ஆனால் விஜயனோ புவனாவின் கோபத்தினால் பாதிக்கப்படவே இல்லை. தன் காலருகே உருண்டு விழுந்த மோதிரத்தைக் குனிந்து எடுத்துக் கொண்டு, ''அழகிய மோதிரம் தான். அமுதாவின் தங்க விரல்களுக்குத் தகுதியான பரிசுதான்'' என்று கூறிக் கொண்டே அதைத் தன் இடையில் செருகிக் கொண்டவன் ''வருகிறீர்களா? தங்களைக் காண மன்னர் காத்திருக்கிறார்'' என்றான்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளைப் போல் புவனா 'வாருங்கள் போகலாம்' என்று கிளம்பினாள்.

மன்னருக்கும் மற்றவர்களுக்கும் போக்குக் காட்டி விட்டு வேறு வழியாகக் குகையினுள் புகுந்து புவனா விஜயன் உரையாடல் முழுவதையும் ஒளிந்திருந்து கேட்ட நாகனின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. 'திட்டமிட்டபடி எல்லாமே வெற்றியாகி வருகின்றன. விரைவிலேயே மாய மோதிரமும் என் வசமாகி விடும்!' என்ற குதூகலத்துடன் அவசர அவசரமாகக் குகையை விட்டு வெளியேறினான்.

(தொடரும்)

உண்மை உயிர் காத்தது!

அல்லயன்ஸ் ராமன்.



அக்பரின் சைன்யம் சித்தூர்க் கோட்டையை நாலாபுறமும் சூழ்ந்திருந்தது. மன்னன் மஹாராணா பிரதாப் ஆராவலி மலைப் பிரதேசத்தில் தங்கியிருந்தார். நம்பகமான சர்தார்களுடன் மந்திராலோசனை செய்து எதிரியை முறியடிக்கத் திட்டம் வகுத்துக் கொண்டிருந்தார்.

ராஜபுத்திரப் படைத் தலைவர் ரகுபதி சிங் அசகாய சூரர். அவர் உயிருடனிருக்கும் வரையில் முகலாயர்களின் முற்றுகை நிலைத்திருக்காது என்பதை உணர்ந்த முகலாய சேனாதிபதி, அவரை பிடித்துக் கொண்டு வருபவருக்குப் பத்தாயிரம் தங்க நாணயமும் ஒரு கிராமமும் பரிசளிப்பதாக நாடெங்கும் அறிக்கை விட்டிருந்தார்.

ரகுபதியின் அருமை மைந்தன் நோய் வாய்ப்பட்டு ஆபத்தான நிலையிலிருப்பதாக ராணாவின் முகாமிற்கு ஒரு நாள் சமாசாரம் கிடைத்தது. மிக்க வேதனை அடைந்தார் ரகுபதி. குழந்தையைப் பார்த்து வர வேண்டும் என்று உள்ளம் துடித்துக் கொண்டிருந்தார். ஆனால் யுத்த ஏற்பாடுகளில் தீவிரமாக மூழ்கியிருந்ததினால், தன் ஆவலை ராணாவிடம் வெளிப்படையாகக் கூறத் தயங்கினார். இதை அறிந்த ராணா பிரதாப் சிங், அவரை உடனே போய் வருமாறு வற்புறுத்தி, அனுமதியும் தந்தார்.

நகரத்தின் தலை வாசலை நோக்கி, நள்ளிரவு நேரத்தில், கன வேகத்தில் வந்து கொண்டிருந்த குதிரை வீரனைக் கவனித்த ஆயுதம் தாங்கிய காவலாளி, ''நில், யார் நீ?'' என்று வழி மறித்தான்.

பொய் சொல்ல விரும்பாத ரகுபதி, தான் யார் என்பதை மறைக்காமல் சொன்னார். காவலாளியின் முகம் மலர்ந்தது.

''உங்களைப் பிடிப்பவனுக்குப் பெரும் வெகுமதியும், உங்களுக்கு மரண தண்டனையும், காத்திருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாது போலும். அச்சா, இப்பொழுது உங்களைக் கைது செய்கிறேன்'' என்றான் காவலாளி.

''பஹ்ரே தார், உன் கடமையை நிறைவேற்றுவதை நான் தடுக்கவில்லை. ஆனால் அதற்கு முன் ஒரு சிறிய உபகாரம் நீ செய்ய வேண்டும். என்னுடைய அருமை மகன் மரணப் படுக்கையிலிருக்கிறான். அவன் முகத்தை ஒரு முறை பார்த்து வர எனக்கு அவகாசம் கொடு. உனக்குக் கிடைக்கப் போகும் பரிசு கை நழுவி விடுமோ என்று சந்தேகப்படாதே. தாமதிக்காமல் திரும்பி வந்து, நாளை இந்த நேரத்தில், என்னை நானே உன்வசம் தவறாமல் ஒப்புவித்துக் கொண்டு விடுகிறேன்'' என்று உறுதி மொழி சொன்னார் ரகுபதி.

சற்றுத் தயங்கிய பிற்பாடு காவலாளி அவருக்கு சலாம் செய்து வழிவிட்டான்.

சிட்டாகப் பறந்து தன் மாளிகையை அடைந்த ரகுபதி, குழந்தையைக் கண்டு உச்சி முகர்ந்து ஆனந்தத்தை அநுபவித்தார். குடும்ப வைத்தியரிடமும் நண்பர்களிடமும் பொறுப்பை ஒப்புவித்தார். அன்பே உருவான பத்தினிக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லி, மறுநாள் இரவு அதே நேரத்தில் சொன்னபடி விரைந்து வந்து, காவலாளியிடம் தன்னைச் சமர்ப்பித்துக் கொண்டார்.

உண்மையில் அவர் திரும்பி வருவாரா என்பதைப் பற்றி சந்தேக நோக்குடன் காத்துக் கொண்டிருந்த காவலாளிக்கு, அவருடைய வருகை பிரமிப்பை அளித்தது. எவ்விதச் சம்பாஷணையிலும் கால விரயம் செய்யாமல்

அவரைக் கைது செய்தான். மறுநாள் காலை சேனாதிபதியின் முன் அவரை அழைத்துப் போய், முழு விவரத்தையும் சொன்னான்.

''ரகுபதி சிங், மரண தண்டனை காத்திருக்கிறது என்பது தெரிந்திருந்தும் ஏன் திரும்பி வந்தீர்?'' என்று கேட்டார் முகலாய அதிகாரி.

''ஐயா, நான் சாவைக் கண்டு அஞ்சவில்லை. ஒரு ரஜபுத்திரன் தான் கொடுத்த வாக்கை மீற மாட்டான், நம்பிக் கைத் துரோகம் செய்யவும் மாட்டான். என் வார்த்தையை நம்பி விசேஷ சலுகை காட்டிய காவலாளியை நான் மோசம் செய்வேனா?'' என்று சாந்தமாகப் பதில் கொடுத்தார் ரகுபதி.

அவருடைய அஞ்சா நெஞ்சத்தையும் நேர்மையையும் கண்டு வியந்து பரவசமடைந்த முகலாய சேனாபதி அவரை உடனே விடுதலை செய்தார்.

ஒட்டைச் சிவிங்கி தெரியாதா, ஆப்பிரிக்காவில் மட்டுமே காணப்படுகிறது இம்மிருகம். கண்களைச் சுற்றிலும் கருமை. மை தீட்டிக் கொண்டது போல. தீட்சண்யமான பார்வை இதற்கு. நெடுந் தூரத்தில் உள்ள காட்சிகளையும் கச்சிதமாகக் காண முடியும். நீண்ட உதடுகள். நாக்கும்கூடத் தான். ஒட்டைச் சிவிங்கி நாக்கை நீட்டினால் அது பதினெட்டு அங்குலம் வரை நீளும். இதன் கழுத்தில் குட்டையான பிடரி மயிர் உண்டு. வாலின் நுனியில் கருமையான முடிக் கற்றை இருக்கும். உடல் நிறம் செம்மை கலந்த பழுப்பு வெள்ளைக் கோடுகளால் பிரிக்கப்பட்டிருக்கும்.

கீழே குனிய—நீர் அருந்தும் போது—முன்னங் கால்கள் இரண்டையும் அகலப்படுத்திக் கொள்ளும். அப்போதுதான் தலையால் தரையைத் தொட முடியும். அப்போது ஒட்டையைப் பார்க்கவினோதமாக இருக்கும். நன்கு வளர்ந்த ஆண் சிவிங்கி பத்தொன்பது அடி உயரம் இருக்கும். உலகிலேயே உயரமான பிராணி இது தான். பிறந்த குட்டியே ஐந்தரை அடி இருக்குமே!

மரங்களுக்கு மேலாக இதன் தலை இருக்கும். அகேஷியா என்ற ஆப்பிரிக்க மரங்களின் இலைகளை—கொழுப்பு உண்பதில் இதற்கு ரொம்ப விருப்பம். அகேஷியா மரங்களுக்கு இடையே இது நிற்கும் போது இதைச் சுலபமாகக் கண்டு பிடிக்க முடியாது. இதன் உடலில் இருக்கும் கோடுகள் இதை இனம் கண்டு கொள்ள முடியாதபடி காப்பாற்றுகிறது. ஒட்டகத்தைப் போலவே இதுவும் ஒரு மாதம் வரை கூட நீரில்லாமல் வாழக் கூடியது. நீர் கிடைத்தால் ஒரு வாரத்துக்கு இரண்டு காலன் நீரைக் குடிக்கும்.

சாதுவான பிராணி. நின்றபடியே தூங்கக் கூடியது. இது சத்தமே எழுப்பாத பிராணி என்று கூறுவார்கள். ஆனால் சில வேளைகளில் இது கனைப்பதும் உண்டு. சாதுவானாலும் தற்காத்துக் கொள்ளத் தலையால் வேகமாகத் தாக்கும். பின் கால்களினால் உதை தரும். அந்த உதை பயங்கரமானதாக இருக்கும். சிங்கம், இதன் முதல் விரோதி. அதுவும் தனியாகத் தாக்கி வெற்றி கொள்ள முடியாது. மூன்று நான்கு பெரிய சிங்கங்கள் கூட்டாகச் சேர்ந்து தாக்கியே சிவிங்கியைக் கொல்ல முடியும்; அதுவும் நீர் அருந்தக் குனியும் போதுதான்! குட்டி பிறந்து ஒன்பது மாதங்கள் வரை தாய்ப் பாலைக் குடித்து வாழும். அதன் பிறகு அகேஷியா மரத் தளிர்களைச் சுவைக்க ஆரம்பித்து விடும். குட்டிச் சிவிங்கிகள் விளையாடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அட்டைக்கு ஒட்டையும் குட்டியும். வண்ணப்படம் எடுத்தவர் — எஸ். அஸத்.

தகவல் தந்தவர்: சென்னை நகர மிருகக் காட்சி சாலை அதிகாரி




வளம் தரு வீதியிலே...

அதிக மக்களுக்கு போதிய ஆடை

வேஷ்டி, சேலை உற்பத்தி 16 கோடி சதுர மீட்டர் அளவை எட்டியுள்ளது: கடந்த ஆண்டுவரை 10 கோடி சதுர மீட்டர்வரைதான் உற்பத்தி செய்யப் பட்டது.


90 % கன்ட்ரோல் துணி 28,000 கூட்டுறவு சில்லரைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப் படுகிறது: இவற்றில் பெருமளவுக்கு கிராமப் புறங்களில் விற்பனையாகிறது.



நெஞ்சில் உரமும்
செயலில் திறமும்
உறுதுணை நிற்கும்

davp 75/454

தெரியுமா ?



2206. நான்காவதும் கடைசியுமான மகாராஷ்டிரப் போர் நிகழ்ந்தது பின்வரும் ஆண்டுகளில் எப்போது? 1800, 1818, 1836, 1805.

2207. வடநாட்டை ஆண்ட கடைசி இந்தியப் பேரரசர் — ஹர்ஷர், கனிஷ்கர், சந்திரகுப்தர், பிருதிவிராஜ். — இவர்களில் யார் ?

2208. இந்தியாவில் முதல் ஜனக் கணிப்பு எந்த வைசிராயின் காலத்தில் எடுக்கப்பட்டது ?

2209. புகழ்பெற்ற பெண்ணரசியான அஹல்யாபாய் ரஜபுத்திர பேஷ்வா, ஹோல்கார், மராட்டிய வமிசத்தவர் — இதில் எது சரி ?

2210. பங்களாதேஷ் நாணயத்துக்கு என்ன பெயர் தெரியுமா ?

2211. காளான், நாய்க் குடை (Fungi) இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிக்கு ஆங்கிலத்தில் ஒரு பெயர் உண்டு. அது தெரியுமா ?

2212. மொரார்ஜிதேசாய், இந்திரா காந்தி, சவான், சி. சுப்பிரமணியம் இவர்களில் யார் பாரதத்தின் நிதி மந்திரியாக இருந்த போது பதினான்கு வங்கிகள் தேச உடைமையாக்கப் பட்டன ?

2213. லோக் நாயக் என்ற பெயர் ஒரு புகழ்பெற்ற தேசியத் தலைவரைக் குறிக்கும். அவர் யார் ?

2214. நம் நாட்டில் என்.சி.சி. தினம் என்று கொண்டாடப்படுகிறது ?

2215. ரிப்பப்ளிக் டே பானர் (Republic Day Banner) என்பது என்ன?

2216. 'டாங்க்' என்ற போர்ப் படை அமைப்பு முதன் முதலில் எந்தப் போரில் எங்கு பயன்படுத்தப்பட்டது ?

2217. இரும்பைவிட நான்கு மடங்கு கனமான ஒரு வாயுவின் பெயர் தெரியுமா ?

2218. சாப்பிட உபயோகிக்கும் முள் கரண்டியைக் கண்டு பிடித்தவர் யார்?

2219. டி. டி. டி. என்ற கிருமி நாசினி மருந்து செய்யப்பட்டது எந்த ஆண்டு ?

2220. க்ஷவரக் கத்தியைக் கண்டவர்கள் யார் ?

2221. அச்சுத் தொழிலுக்குப் பயன்படும் லினோ டைப் (Lino Type) என்ற யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது எந்த ஆண்டில் ?

2222. கணக்குகளைத் தானே கூட்டி விடை கூறும் யந்திரத்தைக் கண்டவர் யார் எப்போது ?


2223. நீங்கள் எழுதப் பயன்படுத்தும் பவுண்டன் பேனா யாரால் எப்போது தயாரிக்கப்பட்டது ?

2224. சூரியனைவிடப் பிரகாசம் உடைய நட்சத்திரம் உண்டா? உண்டானால் அதன் பெயர் என்ன?

2225. செம்பைவிட அதிவேகமாக மின் சக்தி பாயும் உலோகம் எது ?

2226. விமானங்களின் கனத்தைக் குறைக்க அதன் கட்டுமானத்துக்கு ஒரு வகை உலோகம் பயன்படுத்தப்படுகிறது. அதன் பெயர் தெரியுமா ?

தெரியுமே !



2206. இ. பி. 1818ல் 2207. ஹர்ஷவர்த்தனர். 2208. லார்ட் ரிப்பன் காலத்தில். 2209. ஹோல்கார் வமிசத்தவர். 2210. டாக்கா (Takka) 2211. மைகாலஜி (Mycology). 2212. இந்திரா காந்தி நிதி மந்திரியாக இருந்தபோது. 2213. ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்களே. 2214. நவம்பர் 22ந் தேதி. 2215. குடியரசு தின அணிவகுப்பில் பல்வேறு மாநில என்.சி.சி. மாணவ மாணவியர் பங்கு பெறுவர், பல போட்டிகளும் உண்டு. இப்போட்டிகளில் வெற்றி பெறும் மாநிலத்துக்குக் கொடுக்கப்படும் பாராட்டுக்குப் 'பானர்' என்று பெயர். 2216. முதல் உலகப் போரில் 1916ல் (Somme) என்ற இடத்தில் பயன்படுத்தப்பட்டது. 2217. ராடான் என்ற வாயு. 2218 பிரான்ஸ் மன்னர் மூன்றும் ஹென்றி. 2219 டி.டி.டி. கண்டுபிடிக்கப்பட்டது 1874ல். 2220. ஆதிகால எகிப்தியர். இரும்புக்குப் பதில் செம்பினாலான கத்தியைப் பயன்படுத்தினர். 2221. லினோ டைப் 1834ல் கண்டுபிடிக்கப்பட்டது. 2222. அமெரிக்காவைச் சேர்ந்த பரோஸ் என்பவர் 1888ல் கண்டுபிடித்தார். 2223. வாட்டர்மென் என்பவரால் 1884ல். 2224. உண்டு. சிரின் என்ற அந்த நட்சத்திரம் சூரியனை விட 8000 மடங்கு பிரகாசமுடையது. 2225. வெள்ளியில். ஆனால் வெள்ளி விலை அதிகமாதலால் அதைப் பயன்படுத்துவதில்லை. 2226. டியூரானியம்.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்.

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்... இப் பருவத்தில் அவனுக்குக் கட்டாயம் தேவை இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
சிரப்: 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle சயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் சயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

Sista's INC-362 C R/76 Tam

REGISTERED No. M 9040

GOKULAM Childrens Fortnightly
மலேசியாவில் (விமானப் பதிப்பு) 50 மலேயா காசு

